M
M.V.M
M

BANGALORE 2

விலை அணு 0-2-0. ஆண்டு சந்தா ரூ 6-8-0

போர்வாள்

வால் 6 | சென்னை, 19,26 6 53 வெள்ளிக்கிழமை | வீச்சு 42-43

வாள் மின்னுகிறது!

'போர்வாள்' கடந்த ஆறு ஆண்டுகளாகத் திராவிடத்திலே சிறந்த பணியாற்றி வருகிறது. இன்று அது புது மெருகோடு பளபளக்கும் விதமாக உங்கள் கரங்களிலே காட்சி அளிக்கிறது. போர்வாள், இதுவரை ஆற்றியிருக்கிற பணி மகத்தானது மாற்றாருக்கு மருட்சியும், மற்றவர்களுக்கு மகிழ்ச்சியும் தரத்தக்கது. போர்வாளின் பிடியிலே, இதோ, மணியும் பொன்னும் மின்னுகின்றன. வைரம் ஒளிகிறது. பொன்னும், மணியும், வைரமும், முத... பதிக்கப் பட்டதாயி... விலை உயரவில்லை.

...ண்டு ஆண்டுகளுக்கு ..., "இளவரசி"யை ...வாள் மூலம் காட்டிலே ...வைத்தோம், அன்று. ...ன் "கோமான் புதை... ...பார்வாள் எடுத்துக் ...றது. இளவரசி ...ார்வாள் வாயிலாக ...ட் உதவியவர் ...கா ...ராதாமணாளன். ...வ ... இன்று, கோ...ான் ...யலையும் எழுதிக் ...ாட்டுக்கு. திராவிடர் தம் வாழ்க்கை வளம்பெற இப்புதையல் பயன் படும் என நம்புகிறோம்

எத்தனையோ அறிஞர்களின் வரலாறுகளை, உத்தமர்களின் வாழ்க்கை ஓவியங்களை, அரசியல் மேதாவிகளின் செந்நெறிகளை போர்வாள் விளக்கிக் காட்டியிருக்கிறது. அதே வரிசையில், மா. இளஞ்செழியன் அவர்கள், 'பாரைக் குலுக்கிய புரட்சித் தலைவரை' போர்வாள் வாயிலாக உங்கள் முன் நிற்க வைக்கிறார் தொடர் வரலாறாக. 'அறிஞர் அண்ணா'வை அழகொழுகும் தமிழில் தீட்டித் தந்த அவர், இன்று தனக்கே உரிய தனித்ததொரு தமிழ் நடையால் பாரைக் குலுக்குகிறார்.

இங்கர்சாலின் இன்சுவை ஏடுகளையெல்லாம் தமிழாக்கித் தரும் நெடுஞ்சேரலாதன், முன்பு போர்வாளில் 'கடவுள்களைக் காட்டினார் எழில்பட! இன்று முதல் அவர், 'புனித பைபிளைப்பற்றி' இங்கர்சாலைக் கொண்டு பேசவைக்கிறார் உங்கள் முன்பு. மற்றும் பல கட்டுரைகள், கதைகள், அரசியல் அரங்கு, சுதந்தர ஆட்சியிலே, துலாக்கோல், திரையுலகச் செய்திகள் அத்தனையும் தாங்கி புது மெருகுடன், தொடர்ந்து பணியாற்ற போர்வாள் உங்களிடம் வருகிறது. கறை படியாமல்—துருப்பிடிக்காமல் எங்கும் மின்னும்படி செய்யவேண்டியது எல்லோருடைய கடமையாகும்.

விற்பனையாளர்களே போர்வாளின் செவிலித் தாய்கள். போர்வாள் வளையாமல், ஒடியாமல், கூர்மழுங்காமல் இருப்பதற்கு விற்பனையாளர்தாம் உற்ற துணையானவர்கள். அவர்கள் ஒத்துழைப்பும் உதவியும் ஒழுங்கான ஆதரவும் பெருகவேண்டும்

வளரும் குழந்தையின் குரல்வளையை நெறிக்கும் பணியில் அவர்கள் ஈடுபடக் கூடாது, பட்டியல்படி பணம் அனுப்பாமல் பாராமுகமாக இருந்துவிட்டு! இன்பத்திராவிடமடைய போர்வாள் என்றும் தன் பணியைச் செய்ய பின் வாங்கினதில்லை. அந்தப் பணியைத் தொடர்ந்து ஆற்றும்! உறுதி உறுதி! உறுதி!!!

துலாக்கோல்

வெங்கடாசலபதிக்கு ரூ. 12 லட்சம்

கல்லாக இருந்த திருப்பதி வெங்கடாசலபதி திடீரெனக் கண் திறந்தார்; பக்த கோடிகளைச் சுற்றிப் பார்த்தார். 'ஐயோ' இது என்ன அக்கிரமம்' என்று அலறித் துடித்தார்.

பரவசத்தி லாழ்ந்திருந்த பக்தர் குழாம் பதைபதைத்தது. 'என்ன அனர்த்தம் நேருமோ ஏழுமலையான் கோபத்தால்' என்று ஏங்கித் திகைத்தனர். எத்தகைய கொடுமையைச் செய்துவிட்டார்களோ இந்த நாஸ்திகர்கள் என்று உள்ளங் குழம்பினர்.

ஏழுமலையான் மீண்டும் கோபக் கனல் கக்கினர் 'அக்கிரமம், அநியாயம், அறிவற்ற செயல் ஆகாத வேலை' என முழக்கமிட்டார். அடியார்கள் வணங்கினார்கள். 'அச்சுதா! அமரர் ஏறே! அடியார்களைப் பொறுத்தருளும் ஐயனே!' என்று துதி பாடினார்கள்.

ஆஸ்திகம் நாளுக்குநாள் அடங்கி வருகிறது; நாஸ்திகம் பெருகி தலைவிரித்தாடுகிறது; எம்பிரானுக்குக் கோபம் இல்லாமலா போகும்—பக்தர் ஒருவர் மெதுவாகக் கூறினர்.

திருப்பதி தமிழ்நாட்டு எல்லை; நேரு ஆட்சி நியாயமின்றி ஆந்திரத்தோடு அதைச் சேர்த்துவிட்டது; ஆகவேதான் திருமலையப்பனுக்கு அடக்க முடியாத ஆத்திரம்—மற்றொரு பக்தர் காது கடித்தார்.

நாஸ்திகம் பரவுகிறதா நாட்டிலே! பரவாமல் எப்படி இருக்கும்? உங்கள் பாழாய்ப்போன திட்டம் அந்த நாஸ்திகத்திற்கு நறுமணமல்லவா ஊட்டுகிறது; உங்கள் பகுத்தறிவற்ற செயல் அதற்குத் தூபமிட்டல்லவா வளர்க்கிறது; காலத்தை அறிந்து நடக்கும் கருத்தற்ற கபோதிகளான உங்களால் நாஸ்திகம் வளர்வது மட்டுமா? நமது மானமே பறிபோகிறதே!—உடல் துடிக்க, கண்கள் சிவக்க, மூச்சிலே நெருப்பு பறக்க வேங்கடாசலபதி இப்படிக் கொக்கரித்தார்.

வாய்பொத்தி வணங்கினர் சிலர்; கைகூப்பித் தொழுதனர் சிலர்; கீழே நெடுமரம்போல் வீழ்ந்து பணிந்தனர் பலர்.

தங்க ஓடு! பன்னிரண்டு லட்சம்! என்கோயிலுக்குச் செலவு! வெட்கம் வெட்கம்! அறிவுள்ளோர் ஆற்றும் பணியா இது! எட்டிக்குப் போட்டி இந்தச் செயல்! சிதம்பரத்திலே பொன் ஓடு என்றால், அதற்குப் போட்டி இந்தத் திருப்பதியிலே! பொன் ஓட்டின் கீழிருந்து சிதம்பரம் நடராசன் இத்தனை ஆண்டுகளாகக் கண்ட பலன் என்ன? எனக்கு அது இல்லாததால் வந்த இழுக்கு என்ன? அற்பபுத்தி இது, ஆகவே ஆகாது. தங்க ஓடு வேய்ந்தபின் தரணிவாழ் மக்கள் கஜினி முகம்மதுகளாக மாறாமலா இருக்கமுடியும், அவர்கள் கண்களிலே அவை காட்சி தருகிறபோது? குமுறும் எரிமலைகளை உண்டாக்குகிறீர்கள்; கொந்தளிக்கும் கடல்களைப் படைக்கிறீர்கள். வேண்டாம் விபரீதம்.

கூழுக்கு அழுது சாகும் என் குலக்கொழுந்துகளைப் பாருங்கள்! கண்பஞ்சடைந்து கதிகலங்கி நிற்கும் என் கண்மணிகளைப் பாருங்கள்! பட்டினியால் செத்துமடியும் என் பச்சிளங் குழந்தைகளைப் பாருங்கள்! கஞ்சிக்குக் கதறியலையும் வஞ்சமற்ற ஏழைகளைப் பாருங்கள்! நெஞ்சமற்ற கொடியவர்களா நீங்கள்? ஈவு இரக்கமில்லையா உங்கட்கு?

பன்னிரண்டு லட்சம்! பரம ஏழைகளின் பசி தீர்க்கப் பயன்படுத்துங்கள்! என் அருமைச் செல்வங்களின் அறியாமையைப் போக்கி அறிவொளியைப் பரப்ப அதனைச் செலவழியுங்கள். கைத்தொழிற் சாலைகளைப் பெருக்கி வேலையில்லாத் திண்டாட்டத்தை ஓட்டுங்கள்! கலைக் கூடங்களை வளருங்கள்; தெருவெலாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்யுங்கள். அப்போதுதான் மக்கள் நாஸ்திகப் பாதையில் நகர்ந்து செல்லமாட்டார்கள். நல்லவை பரவும், அல்லவை தேயும். புறப்பட்டுப் போங்கள், நிற்காதீர்கள் இங்கே!—படபடப்போடு இந்த உபதேசத்தைச் செய்தபின் கண்கள் பழையபடி மூடிவிட்டன; அந்தர்த்தியானமாகிவிட்டார் ஆண்டவன்.

இப்படி நடந்திருக்குமா என ஆச்சரியப்படுகிறீர்களா? ஆண்டவனுக்குக் கண்திறந்து பார்க்கும் ஆற்றலும், சிந்தித்துப் பார்க்கும் அறிவும் இருந்தால், இதைத் தவிர என்ன கூறியிருக்க முடியும்! பொன் ஓடா போடுகிறீர்கள்; இடையிடையே வைர ஓடுகளையும் போட்டு அழகுபடுத்துங்கள் என்றா உபதேசமா செய்திருப்பார்!

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

''ஆமாம், வல்லபா! சேர நாட்டு மக்களுக்குப் புதிய ஒளியைத் தரப்போகிறேன்! ஆரியன் என்ற நல்லபாம்பின் வாயில் இன்று சேர நாடு சிக்கிக்கிடக்கிறது! பாம்பைக் கொன்று, வை... தமிழ் நாட்டிற்கு விடுதலை அ... க்கப் போகிறேன்!''

''உன்னால் முடியுமா?''

''ஏன் முடியாது? பார் வ... லபா, குட்டுவஞ்சேரல் எப்படி... பட்டவன் என்பதைப் ... அறிந்துகொள்வாய்! .... ந... அதிகமாகிவிட்டது! நாளை இ... நேரத்தில் திரும்பவும் ... போம்!''

வல்லபன் சென்றுவிட்ட பிறகு, ஏரிக்கரையைவிட்டு கு... டுவஞ்சேரல் கீழே இறங்கி... ஆசிரமத்திற்கு அருகே ... தும், அங்கே கண்ட ... அவனைத் திடுக்கிடச் ... கைகால்கள் நடுநடுங்... ளம் பதைபதைத்து...

முதல் பகுதி

புதிய ஒளி

அல்லி மலர்ந்திருக்கும் தடாகம். பளிங்குக் கற்களாலான படிகளைக் கொண்ட அந்தத் தடாகத்தின் கரைமீது, ஒரு ஆசிரமம். தென்னங் கீற்றால் வேயப்பட்டு, மலர்ச் செடிகளால் சூழப்பட்டிருந்த அந்த ஆசிரமத்தின் முன் புறத்தில்—திறந்த வெளியில்—ஒரு முதியவரும் ஒரு சிறுவனும் படுத்திருக்கிறார்கள். முதியவர் நன்றாகத் தூங்குகிறார் என்பதை அவரது குறட்டை முரசொலிக்கிறது. சிறுவன், தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுப்பதும், வானத்தில் ஆனந்த பவனி வரும் பால் நிலவைப் பார்ப்பதுமாகவும் இருக்கிறான்.

அந்தச் சிறுவனுக்கு அருகே ஒரு கல் வந்து விழுகிறது. அவன் பயத்தோடு சுற்று முற்றும் பார்க்கிறான். சிறிது நேரம் கழித்து மற்றொரு கல் வந்து விழுகிறது. அவன் ஆடாமல் அசையாமல் மெதுவாக எழுந்து உட்காருகிறான். அருகில் படுத்திருக்கும் முதியவரை ஒரு கணம் அச்சத்தோடு கவனிக்கிறான். மறுகணம் துள்ளியெழுந்து, சிறிது தூரத்திலிருக்கும் ஒரு சந்தன மரத்தை நாடி வேகமாக நடக்கிறான். சந்தன மரத்தை நெருங்கினதும், நிழலிலிருந்து வேறொரு சிறுவன் ஓடி வந்து அவனைச் சேர்த்துக் கட்டிக்கொள்கிறான்.

"குட்டுவா! எவ்வளவு நேரம் இந்த மரத்தடியிலேயே நான் காத்திருப்பது?"

"வல்லபா, பேசாதே! அவர் விழித்துக் கொள்ளுவார்! வா, ஏரிக்கரைக்குச் செல்லலாம்!"

குட்டுவஞ்சேரல், வல்லபன் என்ற அந்த இரு சிறுவர்களும் ஏரிக்கரைமீது உட்கார்ந்ததும், சிறிது நேரம் மௌனமாகவே இருந்தனர்.

நிலவொளியில் ஏரியின் தண்ணீர், காய்ச்சி ஊற்றிய தங்கத்தைப் போலத் தகதகவெனப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. தூரத்தில் மலர்ந்திருந்த காட்டு மலர்களின் மணத்தைச் சுமந்து கொண்டு, தென்றல் அங்கே தவழ்ந்து வந்தது. இரண்டொரு பறவைகள் கத்திக்கொண்டு வானவீதியில் பறந்து சென்றன.

"குட்டுவா! உன்னைப் பார்க்கப் பார்க்க, துக்கம் என் நெஞ்சை அடைக்கிறது! உன் ஆடையையும், அடக்க வொடுக்கத்தையும் பார்த்தால்........."

"ஆரியச் சிறுவனைப் போலத் தோன்றுகிறதோ?"

"ஆமாம் குட்டுவா! இதென்ன கோலம்? தமிழ்க் கன்னலின் சாறு நீ! சேரநாட்டின் செல்வம் நீ!......"

"வர்ணனை போதும் வல்லபா, என் வேதனையை அதிகமாக்காதே! நான் யார் தெரியுமா?"

'தமிழரின் வீரத்தைத் தாழ்த்திப் பேசிய கனகன் விசயன் என்ற ஆரிய மன்னர்களைப் போரில் தாள் பணியச் செய்து—தாள் பணிந்த கசடரின் தலையிலே கல் சுமக்கச் செய்து—அந்தக் கல்லைக் கொண்டு கண்ணகியின் சிலை செய்த—மாவீரர் சேரன் செங்குட்டுவனின் மகன் அல்லவா நீ!'

'ஆமாம் வல்லபா! என் தந்தை, அரியாசனத்தில் வீற்றிருந்த ஆரிய மன்னரைத் தாள் பணியச் செய்தார்! அந்த மாவீரனின் மகனான நான், ஆசிரமத்தில் வாழும் ஓர் ஆரியனின் தாள் பணிந்து வாழ்கிறேன்! தந்தை அரசு கட்டிலில்—மகன் ஆசிரமத்தில்! தந்தை மன்னருக்கு மன்னர்—மகன் மாற்று இனத்தானுக்குத் தாசன்!"

"கவிஞர் பரணரின் ஆசிரமத்திற்கு நீயாகத்தானே கல்வி கற்க வந்தாய்?"

"நானாகவா வந்தேன்? ஆரிய பரணரின் ஆசிரமத்திற்கா வருவேன்? இல்லை! வல்லபா, இல்லை! அப்படி நானாகவே கல்வி கற்குமிடத்தைத் தேர்ந்தெடுக்கும்படி என் தந்தை கூறியிருந்தால், நான் களிப்போடு சீத்தலைச் சாத்தனிடம் சென்றிருப்பேன்!"

"அப்படியானால், உன் தந்தையாகவே பாணரிடம் கல்வி பயில அனுப்பி வைத்தாரா?"

"பாணரிடம் என்னை அனுப்பியது—இப்பொழுது நான் ஆசிரமத்தில் வாழ்வது—கல்வி கற்க அல்ல!"

"வேறு?"

"நான் பாணரின் அடிமை—தாசன்!"

"வெஞ்சமரில் ஆரியனை வென்ற சேரன் செங்குட்டுவனின் மகன் — ஆரியனின் அடிமை! வேடிக்கையாக இருக்கிறதே குட்டுவா, உன் பேச்சு?"

"என் பேச்சு உனக்கு மட்டுமல்ல, கேட்போர் அனைவருக்கும் வேடிக்கையாக இருக்கும்! கேட்கும் முதற் கணம் வேடிக்கையாகவும், மறு கணம் வேதனையாகவும் இருக்கும்!"

சோகத்தோடு இப்படிக் கூறிவிட்டு, குட்டுவஞ்சேரல் தன் முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டான். ஆருயிர்த் தோழனை வல்லபன் பார்க்காத விதமாகத் தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டான்.

வல்லபனுக்கு ஒன்றுமே புரியவில்லை. அவன் தந்தை ஒரு பெரிய முத்து வியாபாரி; துறைமுகப் பட்டினமான முசிறியில் வியாபார நிமித்தமாக அவர் இரண்டு ஆண்டுகள் தங்கினார். அவருக்கு உதவியாக இருக்க, வல்லபனும் முசிறியில் இருக்க வேண்டியிருந்தது. நேற்றுதான் அவன் வஞ்சிமா நகரத்திற்குத் திரும்பி வந்தான். வேந்தனின் ஒரே மகனும்—தன் உயிருக்கு உயிரான நண்பனுமான—குட்டுவஞ் சேரலைப் பார்க்க, அவன் அரண்மனைக்குச் சென்றான். நண்பன், பாணரின் ஆசிரமத்திலிருப்பதாகக் கேள்விப்பட்டதும், அங்குச் சென்றான்.

"இரவு வந்து என்னைப் பார்! இந்த ஆசிரமத்திற்கு நான் வந்த விதத்தைக் கூறுகிறேன்!' என்று மன்னன் மகன் ரகசியமாகக் கூறியதின் படியே, வல்லபன் அன்றிரவு வந்திருந்தான். நண்பனின் பேச்சும்—துக்கமும் அவனுக்கு ஒன்றையும் விளக்கமாக அறிவிக்கவில்லை.

"குட்டுவா, நீ ஆரியனின் அடிமை என்கிறாய்—அதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லையே!' என்று வல்லபன் கேட்டதும் குட்டுவஞ்சேரல் தலை நிமிர்ந்து பார்த்தான்.

"வல்லபா! இன்றைய சேர நாட்டில், வீரரின் தொகை குறைந்து வீணரின் எண்ணிக்கை வளருகிறது! அறிவு மங்க, அறியாமை தலைவிரித்தாடுகிறது! என் தந்தை மாவீரர்—இதை யாராலும் மறக்க முடியாது. கனக விசயரை அவர் தோற்கடித்தார். எந்த ஆரிய மன்னரைச் சென்று சிறையில் அடைத்தாரோ அதே ஆரிய மன்னருக்கு—மாடலமறையவன் என்ற ஆரியனின் சொற்படி—விருந்திடச் செய்தார்! இந்த விசித்திரம் சேர நாட்டைத் தவிர வேறு எங்கே நடக்கும்? மதம் என்ற போர்வையின் கீழ், அந்த மாவீரனை ஆரியம் அடிமைப் படுத்திவிட்டது! ஆமாம் வல்லபா இன்று சேரநாட்டை இருள் கவ்வ ஆரம்பித்திருக்கிறது!'

"உன் தந்தையின் போக்கு வேதனையைத் தருகிறதே!'

'வேதனை மட்டுமல்ல, இரத்தக் கண்ணீர் வடியச் செய்கிறது! ஆரியமாயை அவரை மெல்ல மெல்ல அடிமைப் படுத்திவிட்டது! பாணர் சிறந்த கவிஞரா இல்லையா—அவர் தமிழ் படித்ததின் நோக்கம்—தமிழில் பாடுவதின் உட்கருத்து—இவற்றைப் பற்றி பிறகு கூறுகிறேன்! ஆனால் அவர் இன்று நம் நாட்டில், செல்வாக்கோடு தலை நிமிர்ந்து நடக்கிறார்! அவரிடம் என் தந்தை பெருமதிப்பு வைத்திருக்கிறார்.......ஒரு நாள் அந்த ஆரியப் புலவர் ஏதோ சில கவிதைகளை என் தந்தை முன்பு வந்து பாடினார்!"

'அதற்கு மன்னர் பரிசு தந்திருப்பார்!'

"ஆமாம் வல்லபா, பொன்னை வாரி வாரிக் கொடுத்தார்......"

"இது வழக்கம்தானே குட்டுவா?'

'வழக்கம்தான்! பொன்னைக் கொடுத்ததோடு சும்மாயிருந்திருந்தால், அவரைக் கண்ணிழந்த கபோதி என்று நான் சொல்லத் துணியமாட்டேன்! அவர்......"

"ஏன் தயங்குகிறாய்?'

"அவர் என்னையே, அந்த ஆரியப் புலவருக்குத் தானமாகக் கொடுத்துவிட்டார்!"

"இதென்ன அக்கிரமம்? பெற்ற மகனை, சேரவம்சத்தில் தோன்றிய ஒரே குலக்கொடியை, தானமாகத் தருவதா?"

"ஆமாம் வல்லபா இப்படித்தான் என் அன்னையும் கதறினாள் — அரசரின் சொல்லைக் கேட்டதும்! என் தாயின் சொல்லையும் கண்ணீரையும் அவர் பொருட்படுத்தவே இல்லை!'

"அப்படியானால் உனக்கு இனி பாணரிடமிருந்து விடுதலையே கிடையாதா?'

"பாணர் என்னை ஆசிரமத்தில் வைத்திருப்பது, மதயானையொன்றைத் தாமரைத் தண்டின் நூலால் கட்டி வைத்திருப்பதைப் போன்றது! மதயானை நினைத்தால்—அதற்குச் சீற்றம் பிறந்தால்—தாமரை நூலா ஒரு தடையாக இருக்க முடியும்?'

"அப்படியானால், ஆசிரம வாழ்க்கையை உதறித் தள்ளிவிட்டு.........."

(4-ம் பக்கம் பார்க்க)

சுதந்தர ஆட்சியில்!

முன்னூறு ஆண்டுகளுக்குத் தேவையான அலுவலகச் சாமான்கள்

நமது நாட்டுக்கு இணை உலகில் வேறு எந்த நாடுமே கிடையாது. அறிவிலும் முன் யோசனையிலும் அவ்வளவு சமர்த்து. 'காலுக்கேற்ற செருப்பா, செருப்புக்கேற்ற காலா' என்று கேட்டால், நிச்சயமாகத் தயக்கமின்றி நமது சர்க்கார் பதில் கூறுவார்கள், செருப்புக்குத் தக்கபடிதான் காலை சரிப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று. ஏனென்றால் அதிலேதான் சமர்த்து இருக்கிறது. காலுக்குப் பொருத்தமான செருப்பைப் பெறுவது எல்லோரும் செய்கிற சாதாரண செயலல்லவா!

'வருவாய்க்கேற்ற செலவு' என்பது சாதாரண மக்கள் கூறுவது! உள்ள பணத்தையெல்லாம் ஊதாரித்தனமாகச் செலவழித்துவிட்டு பின்பு செலவுக்கேற்ற வருவாய், புதிய வரிகளின் மூலம் தேடிக் கண்டுபிடிப்பதுதான் அறிவுள்ள சர்க்கார் செய்யக்கூடிய காரியம். அதைத்தான் நமது சுதந்தர சர்க்கார்கள் செய்கின்றன. 'ஆற்றிலே போகிற நீரை அப்பா குடி, அய்யா குடி' என்பதைப் போல — 'அடுத்த வீட்டு நெய்யே என் அருமைப் பெண்டாட்டி கையே' என்ற பழமொழிக்கேற்ப — நமது சர்க்கார் ஏழைகளின் வரிப்பணத்தை ஏனோதானோ என்று கோடி கோடியாகக் கொட்டியிருக்கிறார்கள் பாழான பாதைகளிலே. இதோ ஒரு உதாரணம்:

கிழக்கு பஞ்சாபிலே நடந்த நிகழ்ச்சி இது. அங்கு ஆட்சியிலிருப்பவர்கள் காந்திய பாதையைக் கண்டவர்கள்தான். அவர்கள் மூன்று பாரங்களை அச்சிடுவதற்கு டில்லியிலுள்ள சன்லைட் பிரிண்டர்ஸ் என்ற அச்சகத்தாரிடம் அனுப்பினார்கள். அந்த மூன்று பாரங்களில் ஒன்று IAC, FAC, 93 என்பது. முதலில் 200 இதழ்களோடு கூடிய 2000 புத்தகங்கள் அச்சிட உத்தரவிட்டு முன்பணம் ரூ 6000 தரப்பட்டது. பிறகு அது 50 புத்தகமாகக் குறைக்கப்பட்டுவிட்டது. அவ்வாறு அச்சிட்டுத் தரப்பட்ட 50 புத்தகங்களின் உண்மையான மதிப்பு ரூ 40 மட்டுமே இருக்கும் என்று கூறப்படுகிறது. 40 ரூபாய் மதிப்புள்ள பொருளுக்கு 6000 ரூபா தரப்பட்டிருக்கிறது. ஆளும்தரம் அவ்வளவு அதிகம் இந்த அஹிம்ஸா மூர்த்திகளின் ஆட்சியிலே!

இதுமட்டுமா? பஞ்சாப் சர்க்கார் மத்திய சர்க்காரிடமிருந்து பெற்ற காகித கோட்டாவை தனிப்பட்டவர்கள் பயன்படுத்தி லாபவேட்டை அடித்திருக்கிறார்கள் என்றும், ரூ 8,55,950 மதிப்புள்ள காகிதம் உபயோகமின்றி மக்கி, பல ஆண்டுகளாகப் பாழாகிக் கிடக்கின்றன என்றும் அறிவிக்கப்படுகிறது. சமர்த்து என்றால் இது அல்லவா சமர்த்து!

M 29 என்பது மற்றொரு பாரம். இது ஒரு நூற்றாண்டுக்குத் தேவையான அளவு அச்சிட்டு அடுக்கி வைக்கப்பட்டிருக்கிறதாம்.

மூன்றாவது பாரம் F 2 என்பது. இது முன்னூறு ஆண்டுகள் வரை உபயோகப்படுத்தக் கூடிய அளவுக்கு அச்சிட்டு வைக்கப்பட்டிருக்கிறதாம். தனக்குப் பின்னால் மந்திரி பதவி ஏற்பவர்களுக்கு அச்சிடத் தெரியாது என்ற எண்ணம்போலும். அறிவுக்குந் திறமைக்கும் சிக்கனத்திற்கும் இந்த சர்க்கார் ஒரு நல்ல உதாரணம்.

ஏழைகள் கஞ்சிக்கு அழுகிறார்கள். அவர்கள் வரிப்பணம் இப்படி ஒவ்வொரு ராஜ்ய—மத்திய சர்க்காரிலும் பாழாக்கப்படுகிறது. இதைச் சொல்வது தேசத் துரோகமாம். உண்மையிலேயே இது தேசத்துரோகமானால், அந்தப் பட்டத்தை ஏற்றுக்கொண்டாவது இந்த அநியாயத்தைப் பொது மக்களுக்கு உணர்த்த 'போர்வாள்' எப்போதும் தயங்காது.

தியாகிகள் பேசுகிறார்கள்

நமது காங்கிரஸ் தியாகிகளின் மானிய இனாம் பட்டியல் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே போகிறது. ஒவ்வொரு தியாகிகள் மாநாட்டிலும் ஒரு புதிய கோரிக்கை புறப்பட்டுக் கொண்டே இருக்கிறது.

காங்கிரஸ் தியாகிகள் இரு வகைப்படுவார்கள்: ரகசிய தியாகிகள், பகிரங்கத் தியாகிகள் என்று அவர்களை அழைக்கலாம். ரகசிய தியாகிகட்கு சுதந்தரம் பெற்ற சூட்டிலேயே பெர்மிட், லைசென்ஸ், பஸ் ரூட், காண்ட்ராக்ட் ஆகிய ரகசிய மானியங்கள் அளிக்கப்பட்டு, அவர்கள் அதன் மூலம் தங்கள் பெட்டிகளை லட்சக்கணக்கிலே நிரப்பிக் கொண்டிருக்கிறார்கள். இது எல்லோரும் அறிந்துள்ள சந்தி சிரிக்கும் பகிரங்க ரகசியம்.

இனி, பகிரங்க தியாகிகளைப் பற்றி பார்ப்போம். அவர்களிலே ஐந்து ஏக்கர் பத்து ஏக்கர் நிலம் பெற்றவர் முதல் ஒரு லட்ச ரூபா மதிப்பிடக் கூடிய நிலங்களைப் பெற்ற சஞ்சீவி ரெட்டிவரையுள்ள நிலத்

(19-ம் பக்கம் பார்க்க)

கேள்வி - பதில்

கே: திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நிரந்தர தலைவர் இல்லாத காரணம் என்ன?

—வள்ளிநாயகம், இலங்கை

ப: ஜனநாயகம் வளரவேண்டும் என்பதிலே நம்பிக்கையும் பற்றும் நமக்கு இருக்கிற காரணத்தைத் தவிர வேறு எதுவாக இருக்கமுடியும்? நம் உள்ளத்திலே குடிகொண்டிருந்த நிரந்தர தலைவரைவிட்டு நாம் வெளியேறியது சர்வாதிகாரத்தை எதிர்த்துத்தானே!

கே: 'பொதுவுடமை பேசும் புனிதர்கள்' சில தினங்களாக நம்மைப்பற்றி மட்டரக பிரசாரம் செய்து வருவதும், பணத்காரத்தில் இறங்கி இருப்பதும் ஏன்?

—செந்தாமரை, திருவண்ணாமலை

ப: இது தெரியாதா? 'காரியம் ஆகிறவரை காலைப்பிடி, காரியம் முடிந்தால் குடுமியைப் பிடி' என்ற தமிழ்நாட்டுப் பழமொழியை அவர்கள் மனப்பாடம் செய்து வைத்திருப்பதுதான்.

கே: 'காயமே இது பொய்யடா' —இதன் கருத்து யாது?

—வள்ளிநாயகம், இலங்கை

ப: 'வாழ்வாவது மாயம், இது மண்ணாவது திண்ணம்' என்பதுதான்.

கே: ஒற்றைப் பார்ப்பானும், இரட்டைத் தமிழனும் எதிரே வந்தால் காரியம் கைகூடாது என்கிறார்களே, உண்மையா?

ப: உண்மை அதுவல்ல; பார்ப்பான் பிரிந்து வாழக்கூடாது, தமிழன் சேர்ந்து வாழக் கூடாது என்ற அந்தரார்த்தம் —ஆரிய சூழ்ச்சி — அதற்குள்ளே தொக்கிக்கிடக்கிறது. புதுக்கல்வித் திட்டத்திற்குள்ளே வர்ணாஸ்ரமம் பூசி மெழுகி வைக்கப்பட்டிருப்பதைப்போல அந்தப் பழமொழிக்குள் ஆரிய அபிலாஷை அடங்கிக்கிடக்கிறது.

கே: தி. மு. கழகத்தைச் 'சினிமாக்கட்சி' என்று ஓயாது சிலர் கிண்டல் செய்கிறார்களே, அதைப்பற்றி தாங்கள் என்ன கூறுகிறீர்கள்!

—சினிமாப்பித்தன், திருச்சி

ப: கூறுவதற்கு என்ன இருக்கிறது? முயன்று தோற்றவர்களின் 'முகாரி' அது என்று உங்களுக்குப் புரியவில்லையா? 'சீ சீ, இந்தப் பழம் புளிக்கும் தின்றவன் பல்லெல்லாம் இளிக்கும்' என்ற குள்ளநரியின் கதையை நீர் சிறு வயதில் படித்தது இல்லையா? அந்தக் குள்ளநரி வர்க்கத்தின் கொடிதூக்கிகளாக அவர்கள் இருக்கக்கூடும்.

கே: இந்தியாவிலேயே மலிவாகக்கிடைக்கும் மூலப்பொருள்கள் எவை?

—கிருஷ்ணன், தங்கவயல்

ப: ஊருக்கு உபதேசமும் உதவாக்கரை சழக்கைப்பேறும் இந்த நாட்டிலே ஏராளம்.

கே: 'சொர்க்க வாசல்' எப்போது திரையிடப்படும்?

—அண்ணா அன்பன், சேலம்

ப: ஆகஸ்ட் மாத இறுதியில் வெளிவரலாம் என்று கூறப்படுகிறது. அதற்குள்ளே, வெட்டும் ஒட்டும் முடியவேண்டும். சொர்க்க வாசலுக்கு முன்னே 'சென்சார்' என்ற 'நரகவாசல்' ஒன்று இருப்பது தங்களுக்குத் தெரியாதோ?

கே: எத்தனை முறை எடுத்துச் சொன்னாலும் புரிந்து கொள்ளாத பிரகஸ்பதிகளை என்ன பேரிட்டழைப்பது?

—சேரமன்னி கோலார்

ப: 'தேசியத்தார்கள்' என்று தாராளமாக அழையுங்கள், தோழியரே. பிரச்னைகளைப்புரிந்துகொள்ளும் ஆற்றலும், புரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆர்வமும் இல்லாத சுயநலத் தியாகிகள் அவர்கள்தான்.

கே: ஓய் நீர் நாஸ்திகர்தானே, உண்மையை மறைக்காமல் சொல்லும்.

—கைலாசநாதன், வெள்ளியம்பலம்

ப: எப்படிக் கண்டுபிடித்துவிட்டீர், நாதரே! உண்மையை மறைக்காமலே சொல்கிறேன்; ஆச்சாரியார் ஒரு பச்சை நாஸ்திகர்; எதற்கெடுத்தாலும் 'இல்லை, இல்லை' என்ற பல்லவியைப் பாடுகிறார். (நாஸ்திகர் — இல்லை என்று மறுப்பவர்)

கே: ராஜாஜி ஏன் தனக்கு சம்பந்தமில்லாத விஷயங்களிலெல்லாம் வீணாகத் தலையிடுகிறார்!

— நல்லதம்பி, மடுவங்கரை

ப: இல்லாவிட்டால் அவர் ஆச்சாரியார் பார்ப்பனர் என்பது பொய்யாகிவிடாதோ?

புனித பைபிளைப்பற்றி....!

மூலம்: இங்கர்சால் மா. நெடுஞ்சேரலாதன்

சற்று பொறுங்கள்...!

இங்கர்சால்! இந்துவல்ல; மதவேற்றுமையின் காரணமாக கிருத்துவ மதத்தையும், அது தாங்கித் திரிகிற புனித நூலான பைபிளையும் (விவிலியம்) குறை கூறினான் என்று உதாசீனமாகக் கூறி ஒதுக்கித் தள்ளிட! பரம்பரையாக நாத்திகத்தின்— நம்பிக்கைபற்றோரின்—வழி வந்தவரல்ல இங்கர்சால்! பரம்பரை பக்தரின் புதல்வன் தான்! பாதிரியார் பெற்றெடுத்த மாணிக்கக் குழவிதான் எனவே பிறப்பைப் பற்றி ஐயம் காட்டி தட்டிக் கழித்துவிட முடியாது அவர் வாதங்களை! பேச்சு ஒன்று, செயல் பிறிதொன்று—முற்றும் முரணான கொள்கையுடையவராக இருக்கவில்லை இங்கர்சால்! நாத்திகன் தான்! ஆனால் நல்லறிவாளன்!

கடவுளை நம்பவில்லை அவன்! கருணையை நம்பினான்! ஆண்டவனை அணுகவில்லை! அன்பை அணுகினான்! "தூயோனை'த் தொழவில்லை! தூய்மையை துவைத்தெடுத்தான் தன் நடத்தையில்! எல்லாப வல்ல 'உத்தமனை' வேண்டவில்லை அவன்! உண்மையை உணர்த்தினான் ஊராருக்கு! அன்னாரின் எழுத்துச்சித்திரம் தான் இந்த "புனித பைபிளைப் பற்றி" என்னும் கருத்தோவியம்! ஆராய்ச்சிக்கு அரண் செய்யும அற்புத அலங்கார ஓவியம்! அமெரிக்க நாட்டின் அழகு மாடமாளிகைகளிலே — வனந்தரங்களிலே— பகுத்தறிவு கீதம் பாடித் திரிந்த "குயில் அண்ணவை" தமிழகச் சோலையிலே செந்தமிழில் பாடவைத்திருக்கிறேன். தமிழர்கள் — திராவிடர்களின்—செவிக்கு விருந்தளிக்க வேண்டும், என்ற நல்லெண்ணத்தால், கருத்துக்குக் கட்டிக்கரும்பாக இருக்கிறது என்று கருதுவதால். உண்டு மகிழ்க! கேட்டு பயனுறுக! தவறான கருத்துக்கள் மனதிலே உலவினால் திருந்துக!

இதோ 'அமெரிக்கக் குயில்' பாடத் தொடங்கிவிட்டது செந்தமிழில். நான் எதற்காக இடையில்?

* * *

இங்கர்சால் இதோ பேசுகிறார்:

எவராவது பைபிளைப்பற்றிய உண்மையை எடுத்துக் கூறமாட்டார்களா என்று இதுகாறும் எதிர்பார்த்திருந்தேன்! எவரும் கூறவே இல்லை. உபதேசிகள் கூறத் துணியமாட்டார்கள்; தாங்கள் பலிபீடத்திற்குத் துரத்தப்பட்டு விடுவார்கள் என்ற அச்சத்தால் கல்லூரிப் பேராசிரியர்கள் கூறத் துணியார்; ஏனெனில் அவர்களின் ஊதியம் போய்விடும்! அரசியல் வாதிகள் அறிவிக்க அஞ்சுவர், தாங்கள் எங்கே தேர்தலில தோற்கடிக்கப் படுவோமோ என்ற காரணத்தால்! பத்திரிகை ஆசிரியர்கள் எடுத்துக்கூற மாட்டார்கள், தங்களின் சந்தாதாரர்கள் நீங்கி விடுவார்களே என்ற அச்சத்தால்! வியாபாரிகள் வெளியே விளம்ப பயப்படுவர், ஏனெனில் அவர்கள் தங்களுடைய வாடிக்கைக்காரர்களை இழக்க நேரிடும்! எதைப்பற்றியும் பெருந்தன்மையாக இருக்கவிரும்புபவர்களுக்கு உண்மையை உரைக்க உரம் இருக்காது, தாங்கள் எங்கே தம் அந்தஸ்திலிருந்தே வெளியே வீசி எறியப்பட்டுவிடுவார்களோ என்ற காரணத்தால்! குமாஸ்தாக்கள்கூட சொல்ல அஞ்சுவர், தங்கள் வேலைக்கு ஆபத்தாகி விடுமே என்ற பயத்தால்! எனவே தான், நானே பைபிளின் உண்மை உருவத்தை ஊராருக்கு உரைக்க விழைந்தேன்.

பல லட்சக்கணக்கான மக்கள் பைபிளை கடவுளின் உபதேசம் பெற்ற நூல் என்று நம்பிக் கொண்டிருக்கிறார்கள்! லட்சக்கணக்கானவர்கள், இந்த நூல் தான் எல்லாவற்றிற்கும் எல்லாம் என்றும், எந்த ஒரு நூலும் இதற்கிணையான மகத்துவத்தோடு இல்லை என்றும், வாழ்க்கைக்கு இந்நூல் வழிகாட்டி, ஆசைக்கு ஆசான், மகிழ்ச்சியை மலர்விக்கும் மன்னன் என்றும், நிகழ்காலத்திலே அமைதியையும் எதிர்காலத்திலே நம்பிக்கையையும் தரவல்லது இந்த ஏடுதான் என்றும் நம்புகின்றனர்! லட்சக்கணக்கானவர்கள் இந்த ஏடுதான் சட்டத்தை, நீதியை, கருணையை உலகத்திற்கு வழங்கிய வள்ளல் என்றும், உரிமையை, செல்வத்தை, நாகரீகத்தை உலகத்திற்கு இந்த ஏடு அளித்த காரணத்தால், அதற்கு. மனித இனமே கடமைப்பட்டிருக்கிறது என்றும் திடமாக நம்புகின்றனர். லட்சக்கணக்கானவர்கள், இந்தப் புத்தகமே, கடவுளின் கருணை

யால், அவர் தம் பரந்த அறிவால், மனித இதயத்திலே தோன்றி மூளையிலே முளைத்தது தான்—கடவுள் சிந்தின முத்துக்களின் தொகுப்புதான் இந்நூல் என கற்பனை செய்து கொண்டுள்ளனர். லட்சக்கணக்கானவர்கள். இந்த புத்தகந்தான் மரண இருளிலிருந்து மக்களை மீட்க வழி காட்டும் தீபம் என நம்பி வழிபடுகின்றனர் புநித நூலாக! கண்ணீரற்ற உலகிற்கு அழைத்துச் செல்ல, துன்பமற்ற தரணிக்கு வழிகாட்ட இந்த ஏட்டால் தான் முடியும் என நிச்சயமாக நம்புகின்றவர் பற்பலர்!

அப்படிப்பட்டவர்கள் எல்லாம், அதன் முட்டாள்தனத்தை,—அது ஏற்படுத்தும் அடிமைத்தனத்தை,—உரிமையின் உரத்த குரலை — அது அழுத்திக் கொல்ல மேற்கொள்ளும் முயற்சியை—மத நம்பிக்கையற்றவர்களுக்கு அது இழைத்த கொடுமைகளை — மறந்தே விடுகின்றனர். மோட்சசாம்ராஜ்யத்தின் மோகனத்தை நினைக்கிறார்களே அன்றி, மீளாத் துன்பத்தில் மனிதனை எக்காலத்திலும் அழுத்திக்கொல்லும் "நரக வேதனையை" மறந்தே விடுகின்றனர் அன்னார்!

இதயத்திற்கு இலஞ்சம் கொடுத்து, மூளையை அடிமைப்படுத்தி விட்டு சிந்தனையைச் சிறைபடுத்தி விடுகிறது, அந்த ஏடும் அதன் கருத்துக்களும் என்பதை மறந்தேவிடுகின்றனர். உரிமையோடு சிந்திக்கும் அறிவு — எண்ணங்களுக்கு—அது விரோதி என்பதை அவர்கள் நினைத்துப் பார்ப்பதே இல்லை! **உரிமைதான் என் மதம்!** கைகள் விடுதலை அடைந்தால் மட்டும் போதாது. எண்ண விடுதலையும் வேண்டும். அதையே நான் விரும்புகிறேன்! போற்றுகிறேன்!

உரிமை! இந்தச்சொல் வேந்தர்களால் வெறுக்கப்பட்டது! போப்பாண்டவர்களைப் பதற வைத்தது, இந்த உரிமை! அரியாசனங்களை ஆட்டிப் படைத்து, பலிபீடங்களின் ஆணிவேரைப் பிடுங்கின சொல்தான் இந்த உரிமை உரிமை, மக்களை இல்லாத நாட்டிற்கு மன்னனை விரட்டி அடித்த சொல்! மூடநம்பிக்கையின் முதுகெலும்பை ஒடித்து, புதைகுழியிலே தள்ளியதும் இந்த சொல்தான்! உரிமை — நீதியை நிலைநாட்டிய சொல்! கருணையை நுகரச் செய்த சொல்! உரிமை—இதுதான் விதையும், மண்ணும், காற்றும் ஒளியும், முன்னேற்ற மாரியும் அன்பும், காதலும் இன்பமும் அளிப்பது! உரிமை—உலக முன்னேற்றம் என்ற உயரியதோர் மகத்தான தத்துவத்தை உள்ளடக்கிக் கொண்டிருக்கும் சிறியதோர் சொல்!

1
பைபிளின் தோற்றம்!

400 வருடங்களாக அடிமைத்தனத்திலே உழன்றுகொண்டிருந்தவர்களின் சந்ததியார், ஏழைகளாக, உடைகூட இல்லாமல் பரதேசிகளாக, கலையை அறியாதவர்களாக, நாகரீகமற்றவர்களாக, கல்வியே இல்லாதவர்களாக திரிந்த இந்த நாடோடிகள், மத்திய ஆப்ரிக்காவிலே அநாகரீகத்தின் சின்னங்களாக, அவனியை அறியா அறிவிலிகளாக இருக்கிறார்களே இப்பொழுதும், அவர்களைப்போல இருந்த இம்மக்கள் தங்களை அடிமைகொண்டிருந்த ஆண்டைகளிடமிருந்து எப்படியோ தப்பித்துக்கொண்டு சினாய் (Sinai) பாலைவனத்தில் குடியேறினர்.

இந்தக் கூட்டத்தின் தலைவன் தான் **மோசே!** (Moses); பாரோவான் (Pharoan) குடும்பத்தின் வழித்தோன்றல்! எகிப்து நாட்டு புராணக்கதைகளையும் சட்டங்களையும் கற்பிக்கப்பட்டவன்! தன் சகாக்களை — தன்னுடன் இருந்த அந்த நாடோடி கும்பலை அடக்கி ஆள — தன் சொற்படி அவர்களை நடக்கச் செய்ய — அவன் இந்த நாடோடிகளின் கடவுளான ஜெகோவா (Jehovah) தனக்கு உதவுவதாக அவரிடமிருந்து நேரே தான் உபதேசம் பெறுவதாக நடித்தான்!

எந்த ஒரு நிகழ்ச்சி நடைபெற்றாலும், அது நாதனின் கட்டளை எனக்கூறினான் மோசே! தான் கடவுளை நேருக்கு நேராகச் சந்தித்துப் பேசுவதாகவும், கடவுள் தன் புனித கைகளாலேயே பத்துக் கற்பனைகளை (Ten Commandments) எழுதித் தன்னிடத்தில், நேரே — தன் கைகளிலேயே — சினாயின் உயரமான இடத்தில், தான் கொண்டு சென்ற கல்மேஜைகளின்மேல் எழுதிக்கொடுத்தார் என்றும், தனக்கு ஜெகோவாவை எப்படி வழிபடவேண்டும், எது அவருக்கு மகிழ்ச்சி அளிக்குமென்றும், எந்தெந்த சட்டங்களால் மனிதர்கள் ஆளப்படவேண்டும் என்று தனக்கு உபதேசித்திருக்கிறார் என்றும் கதைகட்டி, பாமரமக்களிடம் — தன் முட்டாள் கூட்டத்திடம்—கூறினான்.

இப்படி முளைத்தவைகள்தான் யூதமதமும், மோசேயின் சட்டதிட்டங்களும்!

அப்படி உண்டாக்கப்பட்ட சட்டதிட்டங்கள்தான் மனித இனத்திற்கே படைக்கப்பட்டன பரமனால் என்று கூறுகின்றனர் இப்பொழுதும்.

தொடரும்

ஓரங்க நாடகம்:

[அறிஞர் அண்ணா அவர்களால் பாராட்டப்பட்ட "வாழ்க்கைப் புயல்" என்ற நாடகத்திலே வருகிற ஒரு காட்சிதான் இது]

ஒருநாள் ராஜா!

பாத்திரங்கள்: கம்பத், தம்பட்டமடிப்போன், ராஜாங்க அலுவலாளன், அரசன், முதல் மந்திரி, ஒருநாள் ராஜா, மடாலய மந்திரி, மராமத்து மந்திரி, சுகாதார மந்திரி, உணவு மந்திரி, புயல்நிவாரண நிதிக்காரியதரிசி, பரிமளா, மந்திச் சேவகன், செய்தி அறிவிப்பவன்.

காட்சி 1. (a)

கம்பத்: அன்புள்ள நாடக ரசிகர்களே! தாய்மார்களே! தஞ்சைப் புயல்நிவாரண நிதிக்காக அழகிரி கல்லூரி மாணவர்களாகிய நாங்கள் "ஒருநாள் இராஜா" என்னும் நாடகத்தை இப்பொழுது நடத்த இருக்கிறோம். தோழர்களே! அமைதியுடன் இருந்து இந்நாடகத்தை நடத்தித் தர வேண்டுகிறோம். வணக்கம்.

(திரை)

காட்சி 1. (b)

இடம்: தெரு.

தம்பட்டமடிப்பவன்: டம்... டம்...டம்.

செய்திஅறிவிப்பவன் ராஜாதிராஜ, ராஜ மார்த்தாண்ட ராஜசேகரபூபதியின் ராஜாங்க உத்தரவு யாதெனில், நம் மகாராஜா அவர்களுக்கு சந்ததி இல்லாத காரணத்தால், தன் குடி மக்களிலேயே ஒருவரை இளைய ராஜாவாகத் தேர்ந்தெடுக்கத் தீர்மானித்திருக்கிறார் அதாவது புதிய ராஜாவாகத் தேர்ந்தெடுக்கப் படுபவர் ஒரேஒருநாளைக்குமட்டும் ஆட்சிப் பீடத்திலமர்ந்து அரசியலை நடத்துவதை அரசர் அங்கீகரித்தால் அவரே அன்றுமுதல் இளைய ராஜா ஆகிவிடுவார். (டம்...டம்...டம்...)புதிய மந்திரி சபையின் நிர்வாகம் அரசனுக்குப் பிடிக்காவிட்டால், அவர் ஒருநாள் ராஜாவாகத்தான் இருக்க முடியும். அடுத்த நாள்முதல் ஆறுவருட கடுங்காவல் தண்டனை விதிக்கப்படும் சம்மதமுள்ளோர் புதிய பதவியை ஏற்க ராஜசபைக்கு வரலாம். (டம்...டம்...டம்...)

(திரை)

காட்சி 2.

[மந்திரிகளும் மற்றவர்களும் ராஜசபையில் அமர்ந்திருக்கின்றனர்.]

அரசாங்க அலுவலாளன்: ராஜாதி ராஜ, ராஜ மார்த்தாண்ட ராஜ கம்பீர, ஒய்யார, தீர, வீர, சூர, பராக்கிரம, ராஜ சேகர பூபதி வருகிறார் பராக்...பராக்...பராக்......

[அமைச்சர்கள் அனைவரும் எழுந்து வணக்கம் செலுத்துகின்றனர். அரசனும் அமருகிறான்]

அரசன்: முதல் அமைச்சரே! நமது அரசாங்க அறிக்கையின் படி இளைய ராஜாவாக இருப்பதற்கு இன்று யாராவது முன் வந்திருக்கிறார்களா?

மு. அமைச்சர்: வந்திருக்கிறார் மன்னா!

அரசன்: அரசனுக்கு வேண்டிய அலங்காரங்களை யெல்லாம் அவருக்குச் செய்தாய் விட்டதா.

மு. அ: ஆம்! அரசே!

அரசன்: சரி. நிபந்தனையை மற்றொருமுறை கூறி அழைத்து வரச் சொல்லும்.

அரசாங்க அலுவலாளன்: ராஜாலங்கார, ராஜ கம்பீர, வீர தீர, தற்காலீக ஒரு நாள் ராஜா வருகிறார் பராக்...பராக்...பராக்.

[அரசன் அரியாசனத்தைவிட்டு எழுந்து ஒரு நாள் ராஜாவை அமரச் செய்து, அவரும் அமர்ந்திருக்கிறார் மந்திரி சபையில்]

அரசன்: உம். தர்பாரை நடத்தும்.

ஒ. நா. ராஜா: முதல் மந்திரியாரே! அமைச்சர்களனைவரும் ஆஜராகி இருக்கின்றனரா?

மு அமைச்சர்: ஆம் அரசே!

ஒ. நா. ராஜா: சரி, கலையரங்கம் ஆரம்பமாகட்டும்! [நடனம்—பின்னணி கீதம் முடிந்ததும்] மடாலய மந்திரியாரே! ஆலயங்களிலே ஆறு கால பூஜைகள் அனுதினமும் தவறாமல் நடைபெற்றுக் கொண்டு வருகிறதா?

மடா. ம: ஆம அரசே! சிறப்பாக நடைபெற்று வருகிறது. நமது முதல் மந்திரியார் கோபாலர் பதவி யேற்றது முதல் பிரதி தினமும் காலந் தவறாது பூஜைகளும், திருவிழாக்களும், பஜ கோவிந்த கோஷங்களும், பகவத் கீதை காலட்சேபங்களும் வெகு மும்முரமாக நடைபெற்று வருகின்றன அரசே! அதுமட்டுமல்ல. நானே பிரக்யாதி பெற்ற புண்ணியஸ்தலமாகிய காஞ்சிபுரத்திற்குச் சென்று, தேவாதி தேவர்களுக்கெல்லாம் தேவரான வரத ராஜப் பெருமானை வணங்கி, நமது மந்திரிசபைக்கு ஒருவித இழுக்கும் வரக்கூடாது என்று தனி அர்ச்சனைகளையும் செய்துவிட்டு வந்திருக்கிறேன். மேலும், செல்லுமிடங்களிலெல்லாம் மக்களைப் பார்த்து, தெய்வீகத்தின் மீது நம்பிக்கை வைக்கும்படி பேசிவருகிறேன். இவ்வளவு தெய்வீகப் பிரசாரம் செய்ததால்தான் மழைகூடப் பெய்திருக்கிறதென்று நமது முதல் மந்திரியே கூறியுள்ளார்.

ஒ. நா ராஜா: ஆஹா! நீரல்லவா கலியுகத் தொண்டரடிப் பொடி ஆழ்வார். ஆண்டவனைப் பாதுகாக்கும் கடமை உம்முடையது. மறந்துவிடாதீர்! மந்திரியாரே! நாஸ்திகர்கள் ஏதாவது பிரசாரம் செய்தால் பயந்துவிடாதீர்! போலீசை பக்கத்திலே வைத்துக் கொண்டாவது மடாலய வேலையை கவனியும்!

மு. மந்திரி: அப்படியே அரசே!

ஒ. நா. ராஜா: மராமத்து மந்திரியாரே! உமதிலாகா எப்படி இருக்கிறது?

மரா. மந்திரி: மூன்று ரோடுகள் போட்டிருக்கிறேன் இரண்டு பாலங்களுக்குத் திறப்புவிழா நடத்தி இருக்கிறேன். எனினும் இந்த ஜனங்களுக்கு இது போதவில்லையாம். ஊருக்கு ஒரு நல்ல ரோடாக இருக்க வேண்டுமாம். ஆற்றிற்கு ஒரு சிறந்த பாலமாவது அமைக்க வேண்டுமாம்.

(12-ம் பக்கம் பார்க்க)

இங்கே பரலோகம்! அங்கே பார்வை இன்பம்!

இராமச்சந்திர மிஸ்ரா என்பவர் இரண்டு ஆண்டுக்கு முன் கண் பார்வையை இழந்துவிட்டார். ஆகவே, பணியாற்றத் தகுதியற்றவர் என பதவியிலிருந்து விலக்கப்பட்டார். அவர் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர்.

வைத்தியம் பயன்படாததால் 'கொடுத்தால் கண்ணைக் கொடு; இல்லையேல் உன் திருவடிகளிலேயே பட்டினியாகக் கிடக்கிறேன், தாயே!' என்று 'தாராதேவி' சந்நிதானத்தில் பக்திப் பிரபாவத்தோடு கிடந்தார், அந்த போலீஸ் இன்ஸ்பெக்டர். 48ம் நாள் தேவியின் அருள் கிடைத்தது. கண்களைக் கொடுத்தால் எங்கே இந்த உலகமாயையில் பகதன் சிக்கிவிடப் போகிறானோ என்று எண்ணி, கண்களுக்கு ஒளி தராமலே தன் காலடியில் சேர்த்துக் கொண்டார் தேவி. பரலோகப் பிராப்தி கிடைத்துவிட்டது இன்ஸ்பெக்டருக்கு! இது நிகழ்ந்தது வட இந்தியாவிலுள்ள கட்டாக் என்ற ஊரில்.

ஆனால், பார்வையின்றியே பிறந்து பதினெட்டு வயது நிரம்பிய மங்கை ஒருத்திக்குப் புதிய கண் பொருத்தப்பட்டு பார்வை கிடைத்திருக்கிறது மருத்துவத்தின் மூலம், அமெரிக்காவிலுள்ள நியூயார்க் நகரிலே! ஒரு அமெரிக்கமாது, தான் இறக்கும்போது, தன் கண்களை பிறவிக் குருடர் யாருக்காவது பயன்படுத்திக் கொள்ளும்படி அறிவித்திருந்தாளாம். அதன்படி அவள் இறந்ததும் அவளுடைய கண்கள் விமானமூலம் கொண்டு செல்லப்பட்டு நியூயார்க் பிறவிக் குருடியான மங்கையின் கண்களுக்குப் பொருத்தப்பட்டு கண்ணொளி தரப்பட்டதாம்.

இரண்டு செய்திகளும் ஒரே பத்திரிகையில் ஒரே வாரத்தில கிடைத்திருக்கின்றன.

இன்ஸ்பெக்டரின் மடத்தனம், இங்கு உயிரைக் குடித்திருக்கிறது; யுவதியின் அறிவு விஞ்ஞானத்தின் துணைகொண்டு அங்கு கண்ணொளியைப் பெற்றிருக்கிறது.

பஜகோவிந்த பக்தரே! பக்தி தந்த பரிசையும் பார்! விஞ்ஞானம் தந்த வெளிச்சத்தையும் பார்! ஆண்டவன் பிரசாரத்தை மறந்து அமைச்சர் பதவிக்கேற்ப அறிவுப் பிரசாரம் புரியும்! அதுதான் நீர் செய்யும் உண்மையான மக்கட்பணி.

ஒருநாள் ராஜா......

அதுதான் ஒரு நல்ல சர்க்கார் குறைந்த பட்சமாவது செய்ய வேண்டிய காரியமாம். கத்துகிறார்கள் அவர்கள்!

ஒ. நா. ராஜா: அவர்கள் கிடக்கிறார்கள் மடையர்கள். இதுவரை செய்திருப்பதே ஏராளம். மூன்று ரோடு, இரண்டு பாலம்! அடேயப்பா. இதைவிட அதிகமாக எந்த சர்க்கார் செய்துவிட முடியும்? ஒரு ஊருக்கு ஒரு ரோடா கேட்கிறார்கள். பேராசைக்காரர்கள்! வசதிகளாம் வசதிகள்! வக்ர புத்திக்காரர்கள். சர்க்காரின் சங்கடத்தை அறியாத சழக்கர்கள். பொது ஜனங்களுக்கு நன்மை செய்வது ஒன்றுதான் நம் வேலையா! அவர்களுடைய கூச்சலைப்பற்றி நீர் கவலைப்படாதீர். மந்திரியாரே இன்னும் சிக்கனமாக நீர் உமது இலாக்காவை நடத்தும். நிதி மந்திரி யாருக்குக் கொஞ்சம்கூட தொந்தரவைக் கொடுக்காதீர். புரிகிறதா?

மரா. மந்திரி: புரிகிறது அரசே! அப்படியே செய்கிறேன்!

ஒ. நாள். ராஜா: சுகாதார மந்திரியாரே! உமது இலாக்கா எப்படி?

சு. மந்திரி: நாட்டிலே பல ஆஸ்பத்திரிகளை வைத்து, அதற்கான டாக்டர்களை அமைத்து, நாட்டின் சுகாதார முறையை நல்ல முறையில் நடத்திவருகிறேன். அரசே! ஆனால் நோயாளிகள் அதிகமாகவே பெருகிவருகிறார்களாம். ஆஸ்பத்திரிகளிலே இடங்கள் போதவில்லையாம். நடைப்பாதைகளிலெல்லாம் அய்யோ! அப்பா! எங்களைக் காப்பாற்றுங்கள் என்று நோய் வாய்ப்பட்டவர்கள் கதறுகிறார்களாம். நல்ல ஆகாரங்கள் கிடைக்கவில்லை என்ற புகார்கள் அதிகமாக வருகின்றன. மனுமேல் மனு மலைபோல் குவிகிறது. அதற்குப் பணம்......

ஒ. நா. ராஜா. இல்லை என்கிறீரா? எப்பொழுது பார்த்தாலும் பணம் பணம் என்ற பல்லவிதானா? அரசாங்கத்தில் என்ன பணத் தோட்டமா இருக்கிறது, கொத்துக் கொத்தாய் அறுத்துக் கொண்டுபோக! மந்திரியாரே! நீர் இனிமேல் ஆஸ்பத்திரிகள் கட்ட வேண்டாம். ஆண்டவன் காப்பாற்றுவார் நோயாளிகளை. அவரால் முடியாத காரியமா நம்மால் முடிந்துவிடப் போகிறது. ஆஸ்பத்திரிகள் கட்டுவதே ஆண்டவனை அவமதிக்கும் காரியமாகும் என்பது உமக்குத் தெரியாதா? ஆஸ்பத்திரி வேலையை நிறுத்துங்கள். கோயில் கட்டும் வேலையைத் தொடங்குங்கள். தெரிகிறதா?

சு. மந்திரி: அப்படியே அரசே!

(தொடரும்)

பாரைக் குலுக்கிய புரட்சித் தலைவர்

மா. இளஞ்செழியன்

"ஸ்டாலின்! அந்தச் சொல் ஒரு தத்துவ விளக்கம்! ஒரு போர் முறை! ஒரு செயல் திறன்! ஒரு களங்கரை விளக்கு! ஏழைகளுக்கு நம்பிக்கை! எத்தர்களுக்கு எச்சரிக்கை! சுயநலமிகளின் கருத்தைக் குழப்பும் கேள்விக்குறி! ஏழை மக்கள் கண்டு களிக்கும் ஆச்சரியக் குறி! ஒரு தனி நபரின் பெயரா அது? இல்லை இல்லை! உலக வரலாற்றிலே ஒரு பெரிய அத்தியாயம்!

—அறிஞர் அண்ணாதுரை

ஆம்! அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிடுவது முற்றிலும் உண்மை. வெறும் புகழ்ச்சி இல்லை. ஸ்டாலின் என்னும் சொல், இன்றைய தினம் ஒரு தனி மனிதரின் பெயராக மட்டும் இருக்கவில்லை. உலக வரலாற்றின் ஒரு பெரிய அத்தியாயமாகத்தான் மாறிவிட்டது. பெரிய அத்தியாயம்மட்டுமல்ல; மிக முக்கியமான அத்தியாயம். மனித சமுதாயத்தால் என்றென்றும் மறக்கமுடியாத அத்தியாயம்—படிக்குந்தோறும் படிக்குந்தோறும் பாட்டாளி மக்களின் உள்ளத்தில் மட்டற்ற மகிழ்ச்சியை, எழுச்சியை, ஆர்வத்தை, ஆநந்த கீதத்தை அலை அலையாக எழுப்புகின்ற அத்தியாயம்—ஒப்பற்ற அத்தியாயம்.

ஸ்டாலின்! இந்தப் பெயரைக் கேட்டதும், சோவியத் ரஷ்யா என்கிற அந்தப் பரந்த பூபாகத்திலிருக்கிற இருபது கோடிமக்களின் உள்ளமும் ஆநந்தவெள்ளமாக மாறுகிறது; அவர்களுடைய முகத்திலே புதியதோர் உற்சாகம் ததும்புகிறது; அவர்களுடைய கண்களிலே ஒரு புதிய ஒளி தோன்றுகிறது. அவர்களுடைய செயலிலே ஒரு புது முறுக்கு தென்படுகிறது.

ஸ்டாலின்! சின்னஞ்சிறு சொல்! ஆனால் இந்தச் சொல்தான் அந்த இருபது கோடி மக்களுக்கும் தேனாகத் தித்திக்கிறது. தெவிட்டாத தீங்கரும்பாக இனிக்கிறது. கனி குலுங்கும் சோலையிலே புகுந்து விளையாடும் தென்றலாக மகிழ்வூட்டுகிறது.

ஸ்டாலின்! சோவியத் மக்களிடம் சென்று இப்படி ஒருமுறை சொல்லிப் பாருங்கள்! அந்தப் பெயர், அவர்களுடைய இதய வீணைமீது நடனமாடும் இனிய நாதமாக இருக்கக் காண்பீர்கள்! அவர்களுடைய வாழ்க்கைப் பாதைக்கு வழிகாட்டும் ஒப்பற்ற ஒளிவிளக்காக விளங்கக் காண்பீர்கள்! எண்ண எண்ண இனிக்கும் இன்பமாக, நினைக்கக் களிப்பூட்டும் கீதமாக அந்தச் சொல் ஒலிப்பதைக் கேட்பீர்கள்!

ஸ்டாலின்! இந்தப் பெயரைக் கூறிக் கூறி சோவியத் மக்கள் பூரிப்படையாத வேளை கிடையாது. இந்தச் சொல்லை நினைத்து ரஷ்ய இளைஞர்கள் எழுச்சியும் மகிழ்ச்சியும் கொள்ளாத நேரம் இருக்கமுடியாது,

ஸ்டாலின்! இந்தப் பெயரை நினைத்துக் கொண்டேதான் ஆலைத் தொழிலாளி அங்கே இயந்திரங்களை இயக்குவான்—இயந்திரம், பம்பரமெனச் சுழலும். இந்தப் பெயருக்குள்ளே பொதிந்துகிடக்கிற பெருமையையும் அருமையையும் எண்ணிக்கொண்டேதான் உழவன் அங்கே ட்ராக்டர்களை ஓட்டுவான், கழனிகளை உழுவான்—அறுவடை மலையெனக் குவியும். இந்தப் பெயரைப்பெற்றிருக்கிற மாவீரனல்லவா நமக்கெல்லாம் வாழ்வளித்த நல்லறிஞன் என்ற எண்ணம் பிறக்கும். அங்கே அரசாங்க அலுவலகங்களில் பணியாற்றும் தோழனுக்கு—உடனே, பேனா, கிடு கிடுவென ஓடும்; வேலை, மடமடவென முடியும். ஸ்டாலின் தோன்றியிராவிட்டால் இல்லாமை என்பது இல்லாமல் போய்விட்ட இப்படிப்பட்டதோர் எழில் மிகு பூமி உருவாகியிருக்குமா என்ற சிந்தனை எழும்பும், அங்கே ஆராய்ச்சிக் கூடத்தில் அமர்ந்திருக்கிற விஞ்ஞானிகளின் உள்ளத்தில் உடனே,

அண்மையில் மறைவுற்ற மாபெருந் தலைவர் ஸ்டாலின், உலகப் பாட்டாளிகளின் ஒப்பற்ற தளபதி; ஆயிரமாயிரம் மக்களின் இருதய கீதம்; மானிட சாதியின் ஒளிவிளக்கு, பாரைக் குலுக்கிய புரட்சித் தலைவர். அவருடைய வாழ்க்கை வரலாறு அற்புதமானதோர் காவியம். சுண்டிச் சோர்ந்த நரம்புகளுக்கும் சுறுசுறுப்பூட்டும் டானிக். அந்த அரிய வரலாற்றைத் தோழர். மா. இளஞ்செழியன் B A Hons. "போர்வாள்" வாசகர்களுக்கு அறிமுகப்படுத்துகிறார் இந்த இதழிலிருந்து. தொடர்கட்டுரையின் முதல் பகுதி இது பிற பகுதிகள் அடுத்த வாரம்முதல் தொடர்ந்து வெளிவரும்.

ஆசிரியர்.

ஆராய்ச்சி அதிவேகமாக நடக்கும்; கண்டுபிடிப்புகள் புத்தம் புதிதாக உருவாகும். உழைப்பின் காரணமாக உள்ளம் தளரவில்லை என்றாலும் உடல் சற்று சோர்வடைந்தது போலத் தோன்றினால் உடனே அஞ்சா நெஞ்சன் ஸ்டாலினின் அந்தக் கம்பீர உருவத்தைத் தன் மனக்கண் முன் கொண்டுவருவான் ரஷ்ய நாட்டுப் பாட்டாளி. அவ்வளவுதான்—சோர்வு பறந்துவிடும்—அயர்வும் அசதியும் ஓட்டமெடுத்து மறைந்துவிடும்—புதுமனிதனாகிவிடுவான், அவன்—புதியதோர் சக்தி அவன் உடலில் குடிபுகுந்துவிடும்—பணி முன்னிலும் பல மடங்கு விரைவுடன் நடைபெறும்—அவனே ஆச்சரியப்படுவான் நம்மிடமா இவ்வளவு சக்தி இதுவரை மறைந்துகிடந்தது என்று!

வீதிகள் அமைப்போர், வீடுகள் கட்டுவோர், பாலங்கள் போடுவோர், பால்பண்ணைகளில் பணிபுரிவோர், ஆலைகளை இயக்குவோர், மின்சாரத் தொழிற்சாலைகளில் உழைப்போர், யாராயிருந்தாலும் சரி, சோவியத் ரஷ்யாவில், அவர்களெல்லாம், பணி புரிகிற வேளையில், தங்கள் தனிப்பெரும் தலைவர் ஸ்டாலினின் அஞ்சா நெஞ்சத்தையும் அரும்பெரும் வெற்றிகளையும் நினைத்து மகிழ்ந்தபடிதான் உழைத்துக் கொண்டிருப்பார்களாம். அந்த நினைப்பு, அவர்களுடைய களைப்பைப் போக்கும் "டானிக்"காக விளங்குமாம். அந்த எண்ணம் அவர்களுடைய உள்ளத்திற்கு உற்சாகமூட்டும் உன்னத மருந்தாக அமையுமாம்.

ஆண்டவன் பெயரால் ஆணை! நான் உன்னை ஒரு கணமும் மறக்கமாட்டேன் என்று நம் நாடுகளிலெல்லாம் காதலன், தன் அருமைக் காதலிக்கு உறுதிமொழி கூறுவதைக் காண்கிறோம் அல்லவா! ஆனால் ரஷ்யநாட்டு மக்கள் இந்தவகையாக உறுதியுரை புகலமாட்டார்களாம்! "ஸ்டாலின் பெயரால் ஆணை மாதரசி! என் நெஞ்சம் உன்னைவிட்டு ஒருபோதும் பிரியாது" என்றுதான் காதலர்கள் அங்கே தத்தம் காதலியரிடம் கனிவு மொழி பேசி உள்ளம் களித்துக்கிடப்பாராம்.

புதுமணம் புகுகிற திருமணத் தம்பதிகளை வாழ்த்துகிறபோது, மலரும் அதன் மணமும் போல இணைபிரியாது வாழுங்கள்! தென்றலும் அதன் இனிமையும்போல ஒன்றுபட்டு உலவுங்கள் என்றெல்லாம் இங்கே நாம வாழ்த்துகிறோம் அல்லவா? ஆனால் ரஷ்யாவிலே, இப்படி வாழ்த்தமாட்டார்களாம்! ஸ்டாலினும் அவர் கொள்கையும்போல இணைபிரியாது வாழுங்கள்—ஸ்டாலினும் அவரது அஞ்சாநெஞ்சமும் போல ஒன்றுபட்டு உலவுங்கள் என்றுதான் இன்பவாழ்த்து வழங்குவார்களாம்.

தாய், தன் வாடாமல்லி போன்ற இன்பக் குழந்தையிடம் கொஞ்சும்போது கண்ணே மணியே கற்கண்டே கனிரசமே என்று மட்டும் கொஞ்சினால் அவளுக்குத் திருப்தி ஏற்படுவதில்லையாம் அங்கே! தேனே—தென்றலே—தெவிட்டாத நல்லமுதே என்று இயம்பும் மொழிகளோடு என் அருமை ஸ்டாலினே—கண்ணே *யூகோஸ்லில்லி என்றும் சேர்த்துக் கொஞ்சினால்தான் அவளது தாய் உள்ளம் தனி உவகை அடையுமாம். அப்போதுதான் அவளுடைய சொல்லிலே முழு மகிழ்ச்சி ததும்புமாம். அந்தக் குழந்தையும் வளர்ந்து பெரியவனாகி வெளியே போகும்போது, எங்கேடா போகிறாய் என் உயிரோவியமே என்று தாய் கேட்டால், "இது தெரியாதா அம்மா உனக்கு"... யத் இளைஞர்கள் கழகத்...ப் போகிறேன்! போய், அறிவும் ஆராய்ச்சியும் அடையப்பெற்றால்தானே நானும் ஓர் ஸ்டாலினாக மாறமுடியும்?" என்று கூறுவானும் இளைஞன்.

*ஜோஸப் யூகோஸ்வில்லி என்பது ஸ்டாலினுக்கு அவருடைய பெற்றோர்களால் இடப்பட்ட பெயர்.

ஸ்டாலின் என்னும் சொல்—அந்தச் சொல்லால் குறிப்பிடப்படும்—தலைவர்—அந்தத் தலைவர் ஆற்றிய அருஞ்செயல்கள்—அந்தச் செயல்களால் ஏற்பட்டுள்ள புதுவாழ்வு அளிக்கும் புன்சிரிப்பு—இவற்றைப் பற்றி பேசுவதைவிட, இவற்றின் சிறப்பைப்பற்றி எழுதுவதைவிட, இவற்றின் உயர்வைப் பற்றி எண்ணிப் பார்ப்பதைவிட, இவற்றின் அருமையையும் பெருமையையும் நினைத்து நினைத்துப் பூரிப்பும் பெருமிதமும் அடைவதைவிட சோவியத் மக்களுக்கு அதிக மகிழ்ச்சியூட்டும் செயல் வேறொன்றுங் கிடையாது.

"மாமலையே மாமலையே!
சமவெளியினும் நீ உயரம்!
விரி வானே! விரி வானே!
மாமலையினும் நீ உயரம்!

ஆனால்!

ஸ்டாலினே! எம் தலைவா!
செஞ்சேனைத் தளபதியே!
நின் அருமை எண்ணங்கள்
உயர் வானினும் மிக உயரம்!"

சோவியத் பூமியில் பாடப்படுகிற ஆயிரமாயிரம் நாடோடிப் பாடல்களில் இது ஒன்று. ரஷ்யாவில் உள்ள தாகேஸ்தான் என்னும் பகுதியைச் சேர்ந்த உழவர்குல மாது ஒருத்தி இயற்றிய இன்சுவைக் கவிதை இது. சோவியத் நாட்டின் மக்கள் புரட்சித் தலைவர் ஸ்டாலினின் அறிவையும் திறமையையும் ஆற்றலையும் அஞ்சா நெஞ்சையும் எவ்வளவு சிறப்புடன் பாராட்டி, எவ்வளவு களிப்புடன் கொண்டாடுகிறார்கள் என்பதற்கு இதைவிட எடுத்துக்காட்டு வேறென்ன வேண்டும்?

சோவியத் ரஷ்யாவில் வாழ்கிற அந்த இருபது கோடி மக்கள் மட்டுமல்லர் தளபதி ஸ்டாலினைப்பற்றி ஆனந்த கீதம் பாடுபவர்கள். அகில உலகத்திலிருக்கிற பாட்டாளி மக்களும் அவர் பெயரைக் கேட்கிறபோது ஒரு பூரிப்பும் அவருடைய வாழ்க்கையை அறிகிறபோது ஒரு பெருமிதமும் அடையத்தான் செய்கிறார்கள். ஆப்ரிக்க கண்டத்தில் வாழ்கிற ஆலைத் தொழிலாளியும் சரி, ஆஸ்திரேலியா பூமியில் உழுகிற விவசாய இளைஞனும் சரி, அமெரிக்க நாட்டிலே வாழ்கிற சுரங்கத் தொழிலாளியும் சரி, நியூஜிலாந்து மண்ணில் உலவுகிற ஏழைப் பாட்டாளியும் சரி ஸ்டாலின் என்றதும் ஒரு தனி மதிப்பு கொள்ளத்தான் செய்கின்றனர். எங்கேயோ இருக்கிறது மாஸ்கோ—அங்கே வாழ்ந்து கொண்டிருந்தார் ஸ்டாலின். ஆனால் இங்கே தமிழகத்தில் நெடுந்தொலைவுக்கு இப்பால் உலவுகிற பாட்டாளிகளெல்லாம் கூட, தங்களுக்கு வாழ்வளிக்க ஒரு தலைவர் இருக்கிறார் — ஒப்பும் உயர்வுமற்ற வீரர் இருக்கிறார் — ஏழையை எழில்மிகு மனிதனாக மாற்ற வல்ல தளபதி இருக்கிறார் என்று எண்ணி எண்ணி இறும்பூது எய்துகிறார்கள்.

ஸ்டாலின் வாழ்ந்தது, உலவியது, பேசியது, எழுதியது, இந்தப் பரந்த பூமியில் எங்கோ ஓரிடத்தில்தான். ஆனால் அவருடைய புகழ் ஒளியோ இந்த அவனி எங்கும் பரவி இருந்தது. மலையாளத்து வயல்கள், காஷ்மீரத்து சமவெளிகள், பர்மிய காடுகள், ஜெர்மானிய தொழிற்சாலைகள், பிரஞ்சு நாட்டு சுரங்கங்கள், சுவிட்சர்லாந்தின் கடிகார உற்பத்தி மன்றங்கள், எந்த இடமும் அவருடைய புகழ் ஒளியிலிருந்து தப்பியதில்லை. கட்டை வெட்டும் கந்தன், மூட்டை சுமக்கும் முத்தன், வண்டி இழுக்கும் வரதன், தங்கத்தைத் தோண்டும் தங்கவேலு, முத்தை எடுக்கும் முனிசாமி, எந்தத் தொழில் புரியும் தோழனும், எந்தப் பஞ்சை பராரியும், ஸ்டாலினுடைய பாதையே தங்களுடைய வாழ்க்கைக் கழனிக்கு வளமூட்டும் பாதை என்பதை அறியத் தவறுவதில்லை.

5—3—53 அன்று, மாவீரர் ஸ்டாலின் மரணமடைந்தார் என்ற செய்தி கேட்டதும் ரஷ்யாவும் அந்த நாட்டு மக்களும் மட்டுமல்ல, உலகெங்குமுள்ள பாட்டாளி மக்களும் அந்த மக்கள் வாழவேண்டுமென்று மனமார ஆசைப்படும் எல்லா முற்போக்குவாதிகளுமே சோக சித்திரங்களாக மாறிவிட்டனர். தாங்க முடியாத துயரம் அவர்கள் அனைவருடைய உள்ளத்தையுமே துளைக்கலாயிற்று. ரஷ்ய நாட்டு மாஸ்கோவில் மட்டுமல்ல, ஜெர்மன் நாட்டு பெர்லினில், பிரஞ்சு நாட்டு பாரிசில், பெல்ஜிய தேசத்து பிரஸ்ஸல்சில், டென்மார்க் வட்டத்து கோபன்ஹேகனில், ஸ்பெயின் நாட்டு மாட்ரிட்டில், தமிழ் நாட்டு சென்னையில்,—வளர்த்திக் கொண்டே போவானேன்—உலகத்தின் ஒவ்வொரு மூலைமுடுக்கிலும், ஸ்டாலின் மறைந்துவிட்டார் என்ற செய்தி கேட்டதும் தொழிலாளர்களின் வட்டாரத்திலிருந்தும், முற்போக்கு சக்திகளின் முகாம்களிலிருந்தும் கண்ணீர் கடலெனப் பெருகியது.

மரணம் மிகவும் சாதாரண சம்பவம் பிறந்தவர் அனைவரும் இறந்தே தீரவேண்டும். இது இயற்கை நியதி. இதனைச் சின்னஞ் சிறு மதலைகளும் அறியும். வேறு எத்தனையோ துறைகளில் எவரும் திடுக்கிடத் தக்க பல உண்மைகளையும் புதுமைகளையும் கண்டு பிடித்திருக்கிற விஞ்ஞானத்தாலும் மரணத்தை வெல்வதற்குரிய மார்க்கம் இன்றளவும் கண்டுபிடிக்கமுடியவில்லை. எனவே ஸ்டாலினும் கூட ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் மரணமடையக் கூடியவர்தான் என்பது எவரும் அறிந்தது தான். என்றாலும்கூட அவர் மரணம் அடைந்து விட்டார் என்கிற செய்தியைக் கேட்டதும்மானிலம் துவண்டுவிட்டது மக்கள் இதயம் தூள்தூளாகிடும்போல் ஆகிவிட்டது. உலகப் பாட்டாளிகளால் இந்தச் செய்தியைத் தாங்கவே முடியவில்லை.

படை பல வென்ற தளபதிகள், உலகத்தைத் திருத்திய உத்தமர்கள், புதியன புனைந்த அறிவியல் அறிஞர்கள், விடுதலைக்காகப் போரிட்ட வீரத் தலைவர்கள், என்று இப்படி பலப்பலர் மறைந்ததுண்டு. அந்தக் காலத்திலெல்லாம் சில பல மக்கள் அவர்களின் மறைவுக்காக உருகி அழுததும் உண்டு. ஆனால் ஸ்டாலினின் மரணத்தைக் கேட்டு மனித சமுதாயம் மனம் பதறி அழுததைப் போல் இதற்கு முன்னர், எப்போதுமே அழுதது கிடையாது. இந்த அளவு கண்ணீரை, உலகம், இதற்கு முன்னர் எப்போதுமே சிந்தியது கிடையாது. ஒரு தனி மனிதரின் மறைவுக்காக மானிலம் முழுவதுமே மனம் துடித்த காட்சி, உலக வரலாறு இதுவரை கண்டறியாத நிகழ்ச்சி.

ஆற்றல் வீரர் ஸ்டாலின் எழுபத்திநான்கு ஆண்டுகள் இந்த உலகத்தில் வாழ்ந்தார்—அவருடைய புரட்சி வாழ்க்கை இந்த உலகத்தைக் குலுக்கிய அளவு வேறு எவருடைய வாழ்க்கையும் குலுக்கியதில்லை.

மூளையில் ஏற்பட்ட இரத்தக் கொதிப்பு காரணமாக அந்த மாபெருந்தலைவர் மரணமடைந்தார்—அந்த மறக்கமுடியாத மரணம் இந்த மனித சமுதாயத்தைப் பதறவைத்த அளவு வேறு எவர் மரணமும் பதறவைத்ததில்லை.

ஆமாம்—ஆகவே தான்

அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார் ஸ்டாலின் என்பது ஒரு தனி மனிதரின்பெயர் அல்ல, உலக வரலாற்றிலே ஒரு பெரிய அத்தியாயம் என்று!

உலக வரலாற்றின் ஒப்பற்றதோர் அத்தியாயமாகத்தான் மாறிவிட்டார் ஸ்டாலின் அவருடைய வாழ்நாளில்.

ஆனால், அவர் பிறந்தபோது—நாம் அனைவரும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்—மிகச் சாதாரண மனிதராகத்தான் பிறந்தார்.

1879-ம் ஆண்டு டிசம்பர் மாதம். 21-ம் தேதி. அந்திமயங்கும் நேரம். சோவியத் பூமியின் காகேசியப் பகுதி. அங்கே கோரி என்றோர் நகரம். அந்த நகரத்தில் இல்லாமை என்னும் கொடுமைக்கு ஆளாகி வேதனையால் வாடிக்கொண்டிருந்த ஒரு தம்பதிகள். கணவன் ஒரு செருப்புத் தொழிலாளி—பெயர் விசாரியன் யூகோஸ்வில்லி. மனைவி ஒரு உழவர்குல ஏழை—பெயர் காதரைன் யூகோஸ்வில்லி. மாலைக் கதிரவன் இருளரசியை இரு கை நீட்டி வரவேற்கிற அந்த நேரத்தில் அந்த தம்பதிகளுக்கு ஒரு குழந்தை பிறந்தது.

அந்தக் குழந்தைதான், பிற்காலத்தில், வளர்ந்து பெரியவனாகிய பிறகு, ஸ்டாலின் என்கிற பெயரைத் தனக்குத் தானே சூட்டிக் கொண்டு விட்டது.

"ஏண்டா சக்கிலி! ஒதுங்கிப் போகப்படாதோ! மேலேயே விழறயே! கர்மம் கர்மம!" என்று இந்த நாட்டு வைதீகர்கள் முகத்தை முப்பது கோணலாக்கிக்கொண்டு ஏசிப் பேசுகிறார்களே, அப்படிப்பட்ட ஒரு சமுதாயத்தில், வறுமையின் கொடுமையால் வாட்டி வதைக்கப்பட்ட ஒரு குடும்பத்தில் தோன்றிய ஓர் ஏழைக் குழந்தைதான் ஸ்டாலின்.

அன்றன்றாட உணவுக்கும் திண்டாடித் தவித்த அந்த ஏழைக் குழந்தை ஆயிரமாயிரம் மக்களின் இருதய கீதமாக மாறிவிட்டதே—அது எப்படி?

செருப்புத் தொழிலாளியின் குடும்பத்தில் தோன்றிய ஒரு சாதாரண மனிதர் உலக வரலாற்றின் உன்னதமான அத்தியாயமாக உயர்ந்து விட்டாரே—அது எவ்வாறு?

எங்கேயோ ஒரு மூலையில் எந்தவித வசதியுமற்ற ஒரு வட்டாரத்தில் பிறந்த ஒரு பிள்ளை பாரைக் குலுக்கிய புரட்சித் தலைவராக ஒளி வீசினாரே—அது எங்ஙனம்?

இந்தக் கேள்விகளுக்கு உரிய விடை மிகவும் வசீகரமானதாகத்தான் இருக்கவேண்டும்.

யாது அந்த விடை? காண்போம்!

(தொடரும்)

கலையும் காட்சியும்...

ணம் என்பதை அறிந்துள்ள சினிமா ரசிகர்களுக்கு 'கண்கள்' வெற்றிகரமாக வெளிவரும் என்பதை நாம் சொல்லவா வேண்டும்.

ஔவையார்

தமிழ் மூதாட்டி ஔவையார் விரைவிலே தமிழகமெங்கும் பவனிவர இருக்கிறாளாம். நெடுநாட்களாக ஔவையாரை எதிர்பார்த்திருக்கும் தோழர்களுக்கு ஆகஸ்ட் 15-ம் நாள் ஔவையாரின் பவனி தொடங்க இருக்கிறதென அறிவிக்கிறார்கள் 'ஜெமினியார்'. காட்சி ஜோடனைகள் பிரமாதமாம். ஜெமினியின் கைலாசப்பற்று இந்தப் படத்தின் மூலம் விளக்கமாகிறதாம். ரூபா ஐம்பதாயிரம் செலவு செய்து கைலாசக் காட்சியை சுட்டெடுத்திருக்கிறார்களாம் அதற்காகவென்றே பிரகலாததத் என்னும் வடநாட்டவர் ஒருவர் வந்திருக்கிறாராம். கே. பி. சுந்தராம்பாள், குசலகுமாரி, எம். ஆர். ராதா, நாராயணராவ், எஸ். வி. வி. பந்துலு, சுந்தரிபாய் முதலியோர் திறமையாக நடித்திருக்கிறார்களாம். தமிழ்ப்பாட்டி ஔவையார் எஸ். எஸ் வாசனின் டைரக்ஷனில் வளருகிறாளாம். தூய தமிழ் ஔவையார், அம்மாமித் தமிழ் பேசும் ஔவையாராக வளர்ந்துவிடக் கூடாதென்பதுதான் தமிழர்களின் கவலையாக இருக்கிறது. ஔவையார், கண்களுக்கு நல்ல விருந்தாக இருக்குமென்று கூறப்படுகிறது.

போர்வாள் ஏழாம் ஆண்டு!

விற்பனையாளர்க்குப் பரிசு!

வரும் ஆகஸ்ட் மாதம் மூன்றாவது வாரத்திலிருந்து போர்வாளுக்கு ஏழாம் ஆண்டு தொடங்குகிறது. போர்வாள் வளர்ச்சியில் ஆர்வமுள்ள விற்பனையாளர்கட்கு ஊக்கமூட்டி உற்சாகப் படுத்துவதற்காக ஏழாம் ஆண்டுத் தொடக்கத்தில் சிறந்த விற்பனையாளர்க்குப் பரிசு வழங்குவதென முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

முழு விவரம் அடுத்த இதழில்

உரிமையாளர்.

கன்னட நாட்டிலே ஒரு "கண்ணீர்த்துளி"

— ப. செல்வராசன் —

நாட்டின் மறுமலர்ச்சிக்கு நாடகம் ஒரு அரும்பெரும் சாதனம். ஆனால் அந்தச் சக்தியின் துணையைக்கொண்டு மக்களின் மனதை பலதரப்பட்ட வழிகளிலே அழைத்துச் சென்று மாந்தர் தம் அறிவைப் பாழ்படுத்துபவர் இந்த நாட்டிலே ஏராளம். நாடகத் துறையிலேயே முதன் முதலாக புது அமைப்பை—புரட்சி மனப்பான்மையை உண்டாக்கியவர்கள் திராவிட இயக்கத்தவர்கள் தான். இதன் காரணமாக இன்று தமிழகமெங்கும் பலப்பல நாடக நிலையங்களும் மன்றங்களும் தோன்றி சீர்திருத்தக் கருத்துகளைப் பரப்பி வருகின்றன

தமிழகம் பெருத்த அளவிற்கு இந்தப் புதுமைத் தென்றலை வீசி 'புரட்சியை வளர்த்து' மறுமலர்ச்சியை மலரச் செய்து வருகிறது. ஆனால் கன்னடத்தில்...?

எப்பக்கம் திரும்பினும், கன்னடத்திலே எந்த நகரை நோக்கினும், எங்கும்—எந்த மேடையிலும் ஒரே புராண மயம் ஆம்! நாடகம், சினிமாக்களிலுங்கூட! நாடகத் துறையிலே கன்னடம், அப்படி ஒன்றும் பின்னடைந்து நின்றது கிடையாது. பல ஆண்டுகளாகவே கன்னடத்திலே நாடகக் கலை மேலோங்கி வளர்ந்து வந்திருக்கிறது. புகழ் பெற்ற சில நாடகக் கம்பெனிகள் சென்னையிலும் தமிழகத்தின் சில பல நகரங்களிலும் விஜயம் செய்து தங்களது நாடகங்களை நடித்துக் காட்டிப் புகழும் பொருளும் பெருவாரியாக அடைந்து கன்னடம் திரும்பியுள்ளனர் கன்னட நாட்டின் நாடக வரலாற்றை ஆராய்ந்தால் கிடைக்கிற சான்றுகள் இவை. என்றாலும் சமூக நாடகங்களாக—மக்களுக்கு இந்த இருபதாம் நூற்றாண்டின் இடையே வாழ்வதற்கு வேண்டிய அம்சங்களை விளக்குவதாக, சமூகத்தின் பல துறைகளிலேயும் இருந்து வரும் பழமைகளைச் சாடி புதுக்கருத்துகளைத் தருவதான கொள்கைகொண்ட நாடகங்கள் மிகக்கொஞ்சம். ஏன், விரல் விட்டே எண்ணிவிடலாம்; இன்னும் சொல்லப்போனால் சமூக நாடகங்களைப்பற்றி சற்றும் எண்ணிக்கூட பார்க்கவில்லை நாடகங்களை நடத்துவோர். இந்த நிலையிலேதான் எழுந்தது ஓர் நாடகக் கம்பெனி ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்திரண்டாம் ஆண்டில்!

கலைவாணர் கிருஷ்ணனுடன் அலிபாபா படத்திலே அண்ணனாக நடித்து, தமிழ் மக்களின் கண்ணிலும் கருத்திலும் பதிந்துவிட்ட திரு இரண்ணய்யா அவர்கள்தான் இந்தக் கம்பெனியின் உரிமையாளர். கம்பெனியின் பெயர் கன்னடத்திலே "இரண்ணய்யனவர மித்ர மண்டலி"! தமிழில் —'இரண்ணய்யாவின் தோழமை மன்றம்' என்பதுதான் இந்த அன்பு செறியும் வாக்கியங்கள் பதிந்த படுதாவுக்குள்ளே தான் அவர் கன்னட மொழியிலே—கன்னட நாடகத்துறையிலே—கன்னட நாட்டு மக்களின மனதிலே மூட்டிவிட்ட புரட்சித் தீ—அறிவுத் தாகம்—சீர்திருத்தக் கொள்கை எவ்வளவு பயனுள்ளதாக விளங்குகிறது என்பதை, அவர் இறந்ததன் காரணமாக இன்று மக்களின் மனதிலே இருந்து எழும்பும் பெருமூச்சு எடுத்துக் காட்டுகிறது புகழ் வாய்ந்த தமது தேவதாசி மசமல்டோபி, பிளாக் மார்க்கெட், பங்கநாமா முதலிய நாடகங்கள் மூலம் இரண்ணய்யா அவர்கள் கன்னட மக்களை மட்டுமல்லாது மைசூர் சமஸ்தானத்திலே வதியும் தமிழர்—தெலுங்கர்—மலையாளத்தார் முதலிய பிறமொழி மக்களின் மனதிலும்கூட ஓர் தனிப்பெருமையை தனக்கும் தனது கம்பெனிக்கும் தேடிக்கொண்டார்.

மேற்குறித்த ஒவ்வொரு நாடகமும் சரிக்குச்சரி திராவிட இயக்கத்தின் கொள்கைகளையே முரசறைந்து வந்தன. ஆட்சியாளரின் ஆணவம் மிகுந்த தடுப்புச் சட்டத்தினின்றும் தப்பித்துக் கொண்டும், அவ்வப்போது அடக்குமுறைக்கு ஆளாகியும்கூட தமது கருத்தை — கொண்ட கொள்கையை விடாது நாடகங்களை நடத்திவந்தார், ஆம், மக்களது அமோகமான ஆதரவைக் கொண்டு!

முதலில் தோன்றிய எதிர்ப்பை முழுமூச்சோடு எதிர்த்து நிற்க வேண்டிய தொல்லை அவரையும் தொடரத்தான் செய்தது. என்றாலும் அதனால் அவர் இளைக்கவில்லை சளைக்கவில்லை! மாறாக எதிர்த்து போரிட்டு சமுதாயத்தை மாற்றியமைக்க உழைத்தார் மாற்றம் கண்டார்.

இந்த மாறுதலை ஏற்படுத்திய அந்த வந்தல்—கலைச்செல்வன்—கருத்துக் கலைஞன் — கன்னடத்தின், ஏன் திராவிடத்தின் நாடகக் காவலன் இரண்ணய்யா, கடந்த மார்ச் மாதம் இருபத்திரலாம் நாள் இயற்கை எய்திவிட்டார்! அதுவும் எல்லோரும் அதிசயிக்கும் வண்ணம்! அவரது ஆவி ஜோதியாக மாறவில்லை. அந்தர்த்தியானத்திலே ஆண்டவனோடு ஐக்கியமாகி விடவில்லை! அரங்க மேடையிலே அர்த்த

(19-ம் பக்கம் பார்க்க)

உலக அரங்கிலே!

“சிட்டு”

போர்வாளுக்கு என் நன்றி காணும இந்த ஏழு ஆண்டுகளாக எத்தனையோ முறை கேட்டுப் பார்த்தேன். உலகம் உருண்டையா, தட்டையா? அமெரிகாவுக்கும் ரஷ்யாவுக்கும் என்ன உறவு? ஆங்கிலேயரின் ஆட்டமெல்லாம் கடந்த யுத்தத்தோடு அடங்கிவிட்டதே ஏன்? இந்திய தூதுவராலயம் எமலோகத்திலும் இருக்கிறதா? செஞ்சீனு என்கிறார்களே அங்கே நீரும் நிலமும் மரமும் செடியும் மனிதனும் மிருகமும் கண்களைப் பறிப்பது போல் செக்கச் செவேலென இருக்குமா? இட்லரும் முசோலினியும் புதைக்கப்பட்ட இடத்திலே புல் முளைத்திருக்கிறதா, பொன்மலர் பூத்துக் குலுங்கும் தங்கச் சோலை வளர்ந்து நிழல் தருகிறதா? காமன்வெல்த், ஐக்கியநாடு சபை, உலக பாங்கி, பசிபிக் உடன்படிக்கை என்றெல்லாம் தம்பட்டம் அடிக்கிறார்களே, அவை எப்படிப் பணியாற்றுகின்றன? முடியாட்சி, குடியாட்சி, பூரண சுதந்தர ஆட்சி, காலனி ஆட்சி, கார்டியன் ஆட்சி, அட்வைசரி ஆட்சி, ஜனநாயக ஆட்சி, சர்வாதிகார ஆட்சி, பொதுவுடமை ஆட்சி, முதலாளித்துவ ஆட்சி என்கிறார்களே இவைகளின் தாராதரம் என்ன? பம்பாய் ஆலையில் எழுகின்ற புகை அமெரிக்க ஆலைப் புகையோடு கலந்து உறவாடுகிறதே, ஏன்? வட இந்தியர் கொழுகொழுத்து மினுமினுத்திருக்க, திராவிடர் தேய்ந்து கறுத்துக் கவலையோடிருக்கக் காரணமென்ன?—இந்த அதிசயங்களையெல்லாம் கண்டு களிப்புறவேண்டும்; கனவேகத்திலே உலகைச் சுற்றிச் சுற்றி வந்து நான் காணும் அற்புதக் காட்சிகளை மக்களுக்கு அறிவிக்கவேண்டும் என்பது, ஏழு ஆண்டுகளாக எனக்கிருந்த ஒரே ஆசை. அந்த ஆசை இன்றுதான் நிறைவேறுகிறது. நான் உலகைச் சுற்றிவா ஆசிரியர் அனுமதி கிடைத்துவிட்டது.

‘சிட்டுக் குருவியாவது, உலகஞ் சுற்றுவதாவது’ என்று ஆச்சரியப்படுகிறீர்களா? பெருவயிற்றுப் பிள்ளையாரைச் சுமந்து கொண்டு பெருச்சாளி ஒன்று, உலகஞ் சுற்றி வரும்போது, நான் தன்னந்தனியே பறந்து தரணியைச் சுற்றிவரவா முடியாது!

நான் சுற்றிவரும்போது உலக அரங்கிலே காணும் காட்சிகளையெல்லாம் அவ்வப்போது பட்டவர்த்தனமாக எழுதிவருகிறேன். படித்து மகிழுங்கள்.

திராவிடத்திலே மூடு விழா

அலுவலகத்தை விட்டு நான் வெளியே புறப்பட்டதும், வெள்ளையர் சிலர் என் கண்களிலே பட்டார்கள். முன்பெல்லாம் திறப்பு விழா செய்துகொண்டிருந்த இந்த வெள்ளையர்கள் இன்று மூடுவிழா செய்துகொண்டிருப் தைக் கண்டு ஆச்சரியப்பட்டேன்.

சென்னையிலே, காதுகளைக் குடைந்துகொண்டு, நரகலோகத்துக்கு மக்களை இழுத்துச் செல்வதைப்போல, ஆடி அசைந்து அடிக்கடி சத்தியாக்கிரகமும் செய்துகொண்டு செல்லும் ஓட்டை உடைசல் டிராம்களைக் கொண்டே கொள்ளலாபம் அடித்துவந்த வெள்ளையன், திடீரென டிராம கம்பெனிக்கு மூடுவிழா செய்துவிட்டான். காரணம், கம்பெனிக்கு மாதம் பதினையிரம் ரூபா நட்டமாம். 1,500 டிராம்வே தொழிலாளர் குடும்பங்கள், வாடி வதங்குகின்றன சென்னையிலே, புகலூரில் நடைபெற்றுவந்த சர்க்கரை ஆலையையும் வெள்ளை முதலாளி மூடிவிட்டான். அங்கேயும் 1,000 தொழிலாளர்களின் குடும்ப வாழ்வு அரோகரா ஆகிவிட்டது

திராவிடத்திலே, மைசூர் பகுதி ஒரு தங்கபூமி. புராணத்திலே பொன்னாடு படித்திருக்கிறோம். திராவிடத்திலே பொன்னாடு, கோலார் தங்க வயல் கோலாரிலும் உரிகத்திலும் தங்க வயல்கள் ஏராளமாக இருக்கின்றன. குடைந்தெடுத்தால் கூடை கூடையாகத் தங்கம் கிடைக்கிறது. எத்தனையோ ஆண்டுகளாகத் தங்கச் சுரங்கங்களைத் தோண்டி கொள்ளை லாபம் அடித்துவந்தன பல வெள்ளையர் கம்பெனிகள். இப்போது உரிகத்திலே அதையும் மூடி முத்திரை போட்டுவிட்டார்கள். 3500 பாட்டாளி மக்களின் குடும்பங்கள் பரதவிக்கின்றன அங்கே.

‘உற்பத்தியைப் பெருக்குங்கள்’ என்று ஓயாது மந்திரிகள் கதறுகிறார்கள்; உத்தியோகஸ்தர்கள் கூப்பாடு போடுகிறார்கள்; பெரிய பெரிய காங்கிரஸ் தலைகளெல்லாம் தலை வெடிக்கக் கத்துகின்றன. ஆனால், தொழிற்சாலைகளின் மூடு விழா வேகவேகமாக நடக்கிறது, திராவிடத்திலே. நமது தொழில் மந்திரி கிருஷ்ணாராவ், வாய்திறந்து பல நாளாகிவிட்டது; முதன் மந்திரி ஆச்சாரியாரோ ‘தொழில் கோர்ட் இருக்கிறது; சர்க்கார் செய்வதற்கு ஒன்றுமில்லை’ எனத் திருவாய்மலர்ந்தரு விட்டார்; நேரு பெருமானோ மேரி ராணியார் முடிசூட்டு விழா வைபவத்தில் மூழ்கிக் களித்திருக்கிறார்.

மூடுவிழாவிலேதான் உற்பத்திப் பெருக்க இருக்கிறதோ என்னவோ, ஆட்சிப்பீடத்தில் அமர்ந்திருப்பவர்களுக்குத்தானே அந்தப் பரம ரகசியம் தெரியும்! நமக்கு அது புரியவா போகிறது!

பெல்லாரியில் ஆகஸ்ட்தனம்

சென்னை ராஜ்யத்திலுள்ள மாவட்டங்களில் பெல்லாரியும் ஒன்று. கன்னடமும் களிதெலுங்கும் கூடிக் குலவும் மாவட்டம் அது. மைசூரையும் ஆந்திராவையும் தொட்டுக் கொண்டிருக்கிறது அது. ஆந்திரப் பிரிவினையில், பெல்லாரி, ஆந்திராவைச் சேராதென்றும், கன்னட நாட்டுக்கு அது உரியதென்றும் டில்லி தீர்ப்பளித்துவிட்டது. அந்தத் தீர்ப்பு ஆந்திரர் உள்ளத்தில் தேள்கொட்டியதுபோல் குடையத் தொடங்கிவிட்டது. பெல்லாரியிலுள்ள கன்னட மக்களின் கடைகளையெல்லாம் அவர்கள் சூறையிட்டும், கன்னடம் எழுதப்பட்ட போர்டுகளை உடைத்தும் கொளுத்தியும் நாசப்படுத்தியிருக்கிறார்கள். இது மகா அக்கிரமம் என்று சொல்லத் தோன்றும் உங்களுக்கு. ஆனால் இதற்கு அக்கிரமம் என்று பெயரல்ல; ஆகஸ்ட்தனம் என்றுதான் பேர். அந்த ஆகஸ்ட்தனத்திலே ஆந்திரரும் நிறைந்த அனுபவம் பெற்றவர்தானே!

அப்துல்லாவும் அலியும்

ஷேக் அப்துல்லா காஷ்மீரின் பிரதமர். நேரு இந்தியாவின் பிரத

மர். இருவரும் இணைபிரியாத நண்பர்கள். நேருவின் ஜனனபூமி காஷ்மீர். ஆகவே, காஷ்மீரை அப்துல்லா, இந்தியாவுடன்தான் இணைத்து வைப்பார் எனத் தேசியத் திருமேனிகள் கனவுகண்டன அவரை வானளாவப் புகழ்ந்தன முதலிலே. ஆனால், அப்துல்லாவோ, அவர்கள் முகத்திலே, அன்றைய தினமே, கரியைப் பூசிவிட்டார் தனிக்கொடியும், தனிச்சட்டமும் காஷ்மீருக்கு அமைத்துக்கொண்டதன் மூலம். இன்று, அத் திருநாளிலே 'டில்லியும் கராச்சியும் ஒத்து முடிவுக்கு வந்தாலொழிய காஷ்மீர் பிரச்னை சுமுகமாகத் தீராது' எனப் பேசி இருக்கிறார் இந்தப் பேச்சு காந்திபக்தர்களுக்குக் கருநாகம் தீண்டியது போல் இருக்கிறது. அகண்ட இந்துஸ்தானத்தையும், குறுகிய பாகிஸ்தானத்தையும் ஒன்றாக வைத்துப் பேசுவதா! ஒரே தராசின் இரண்டு தட்டுகளில் சமமாக வைத்துப் பார்ப்பதா! எனச் சீறிவிழுகிறார்கள். கைலாசத்தின் உச்சியிலே ஏற்றிவைத்து அப்துல்லாவைப் புகழ்ந்தவர்கள், தாமோதர் பள்ளத்தாக்கிலே வீழ்த்திக் குத்துகிறார்கள், சொல்லம்புகளால்

அவரோ ஷேக் அப்துல்லா, பாகிஸ்தான் பிரதமரோ மகமத் அலி. இதனை எண்ணும்போது இந்தியாவுக்கு அவர் சம அந்தஸ்து தந்ததே ஒரு அதிசயிக்கத்தக்க செய்தி.

காஷ்மீர் பிரச்னை, இந்தியாவுக்கும், பாகிஸ்தானத்துக்கும், ஐக்கிய நாடு சபைக்கும் ஒரு பெரிய தலைவலி. அந்தத் தலைவலிக்கு மருந்து கண்டுபிடிக்க நேருவும்—அலியும் லண்டனில் கலந்து ஆலோசித்திருக்கிறார்கள். தலைவலி நீங்குமா, அதிகப்படுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். அது பெரிய இடத்துச் 'சேதி' 'சிட்டு'க்குத் தெரியாது என எண்ணிவிடவேண்டாம்.

சுதந்தர ஆட்சியில்...

தியாகிகள் ஒருவகையினர். நிலத்தியாகிகள் என்றதும் தங்களுக்குச் சொந்தமான நிலங்களை விநோபாபாவேயின் பூதான யக்ஞத்தில் கொடுத்துவிட்ட புண்ணிய சீலர்கள் என்று கருதிவிடாதீர்கள். சர்க்காரிடமிருந்து நிலங்களை தங்களுக்கு இனாமாகப் பெற்றிருக்கிற பெருமைக்குரிய தியாகிகள்.

நிலத் தியாகிகளுக்குப் பின்னால் பென்ஷன் தியாகிகள்; அவர்களுக்குப் பின் வீட்டுத் தியாகிகள்; இப்போது கடைசியாக கல்வித் தியாகிகள் கிளம்பியிருக்கிறார்கள்.

தங்கள் தியாகத்திற்குப் பென்ஷன் தரவேண்டுமெனத் தீர்மானித்து பேட்டியுங் கண்டார்கள் முதன் மந்திரியை. அவர் தர மறுத்தால் 'அவரை விரட்டவேண்டும், அல்லது முழக்கயிற்றை தியாகிகள் எடுத்துக்கொள்ள வேண்டும்' என்ற அரிய உபதேசமும் செய்யப்பட்டது இந்தத் தியாகிகளுக்கு. அதன்பின் சென்னைத் தியாகிகள் மாநாட்டிலே வீடு கண்டிப்பாகத் தரப்பட வேண்டும் என்ற முடிவு எடுக்கப்பட்டு மந்திரிகளைக் கண்டு மகஜரும் தரப்பட்டது. இப்போது நான்காவது வகை பகிரங்கத் தியாகிகள், கோவில்பட்டியிலே கூடி, தியாகிகளின் சந்ததியார்களுக்கு கல்லூரிப் படிப்புவரை கற்க இலவச வசதியளிக்கவேண்டுமென தீர்மானம் செய்திருக்கிறார்களாம்.

நிலம், வீடு, பென்ஷன், கல்வி—வசதி, அப்பப்பா, தியாக மான்யப் பட்டியல் இன்னும் எவ்வளவு தூரம் நீளுமோ தெரியவில்லை.

தந்திக் கம்பியை அறுத்து தபாலாபீஸ்களைக் கொளுத்தி நாட்டுக்கு நஷ்டமும் நாசமும் உண்டாக்கிய அருமையான செயலுக்குப் பெயர் தியாகம். அந்த அற்புதத் தியாகத்திற்கு இத்தனை பெரிய மான்யப்பட்டியல். படித்ததும் சிரிக்காதீர்கள்; வெட்கித் தலைகுனியுங்கள். சிரித்தாலும் இந்த அகிம்சா மூர்த்தியின் வாரிசுகள், 144 போட்டுவிடுவார்கள்.

தியாகிகளுக்கு ஜே! பாரத மாதாகீ ஜே!

கன்னட நாட்டிலே...

ராத்திரி பனிரெண்டு மணிக்கு மேல் நாடகத்தில் நடித்துக் கொண்டே இரண்ணய்யா இயற்கை எய்திவிட்டார். எனினும் அது எல்லோருக்குமே ஏற்படக்கூடிய சம்பவமா? மக்கள் மத்தியிலே பேசும்போதெல்லாம்' நான் என் இறுதியை—முடிவை, இந்த மேடைமீதுதான் தேடிக்கொள்ளப்போகிறேன் என அடிக்கடி சொல்லிக்கொண்டே இருந்தார். அப்படியே நடந்தும்விட்டது. கன்னட நாட்டிலே—கன்னட மொழியிலே "கண்ணீர்த்துளி"களின் கருத்துகளை நாடக மேடையிலே நடித்துக் காட்டி நமது கொள்கைகளுக்கு மெருகேற்றி வந்த மேன்மையாளன் மறைந்தேவிட்டான்.

இரண்ணய்யா அவர்கள் பல வருடங்கள் தமிழகத்திலேயே வாழ்ந்தவர், புரட்சிக் கருத்துக்கிடையே வளர்ந்தவர்! கன்னடம் திரும்பியும் கருத்துக்களைக் கைவிட்டாரில்லை. ஒரு முறை அவரை நாடகத்திற்குத் தலைமை தாங்க அழைக்கச்சென்றபோது, புராணமா? சமூகமா? என்ற கேள்விக்கிடையே 'சமூகம்' என்ற பதிலைக் கண்டபின்னர் ஒப்புதல் அளித்தார் என்றால், அவரது உள்ளத்தின் பண்பை என்னென்று சொல்வது?

கன்னட மொழியிலே அவர் காட்டிச்சென்ற வழியைப் பின்பற்றி இப்போதுதான் சில இளம் எழுத்தாளர்கள் புரட்சிகரமான நாடகங்களை எழுத—அவ்வப்போது நடிக்க முற்பட்டுள்ளனர். அவரது மறைவு உண்மையாகவே நாடக மேடைக்குமட்டுமல்ல — கன்னட நாட்டுக்கு மட்டுமல்ல — இலட்சியத்திலே வேரூன்றி வளர்ந்துவரும் திராவிட இனமக்களுக்கே ஈடு செய்ய முடியாத நஷ்டமாகும். அவர் கொண்ட கொள்கையை - வழியைப் பின்பற்றுவதன் மூலம் தான் அந்த மாபெரும் நஷ்டத்தை நாம் ஓரளவுக்கு ஈடுசெய்ய முடியும். அந்தச் சிறந்த பணியை ஏற்று நடத்த முற்போக்குச் சிந்தனையாளரனைவரும் முன்வருவார்களாக! இரண்ணய்யா கொண்ட கொள்கை வாழ்க! அவர் கண்ட புகழும் வாழ்க!

தி. மு. கழக 2-வது மாவட்ட மாநாடுகள்!

இராமநாதபுர மாவட்டம்

ஜூன் 27—28 தேதிகளில்
விருதுநகரில் நடைபெறும்

27—பெண்கள் முன்னேற்ற மாநாடு.

தலைவர்: அருண்மொழி B. O. L.
திரப்பாளர்: அனிமஸ்கரின் M.P.

28—தி. மு. க. அரசியல் மாநாடு.

தலைவர்: என். எஸ். இளங்கோ.
திறப்பாளர்: எம். எஸ். சிவசாமி.

கழகப் பேச்சாளர்கள் அத்தனைபேரும் கலந்துகொள்ளுகிறார்கள்.

நாடகம்: ஜமீன்மாளிகை, பரப்பிரம்மம்.

தென்னாற்காடு மாவட்டம்

ஜூலை 4—5 தேதிகளில்
சிதம்பரத்தில் நடைபெறும்

4—சமுதாய சீர்திருத்த மாநாடு.

தலைவர்: க. அன்பழகன் M. A,
திறப்பாளர்: சி. வி. எம். அண்ணாமலை.

5—அரசியல் மாநாடு

தலைவர்: சி. பி. சிற்றரசு.
திறப்பாளர்: அரங்கண்ணல்.
ஓவியக்கண்காட்சி திறப்பாளர்: எம். ஜி. இராமச்சந்திரன்.

கழகப் பேச்சாளர்கள் அனைவரும் கலந்துகொள்ளுகிறார்கள்.

நாடகம்: காதல்ஜோதி, சந்திரோதயம்.

சென்னை மாவட்டம்

ஜூலை 11—12 தேதிகளில்
சென்னையில் நடைபெறும்

11—சமூக சீர்திருத்த மாநாடு

தலைவர்: S. V. லிங்கம்.
திறப்பாளர்: R. பாலகுருசாமி.
கொடியேற்றுவிப்பவர்: பொற்செல்வி இளமுருகு

12—அரசியல் மாநாடு

தலைவர்: சிவசண்முகசுந்தரம்.
திறப்பாளர்: S. வீரபாகு.

கழகச் சொற்பொழிவாளர்கள் அனைவரும் கலந்துகொள்வர்

இரண்டு நாட்களிலும் நாடகங்கள் உண்டு.

புத்தம்புதிய நூல்!
வேகவேகமாக அச்சாகிறது!
விரைவில் வெளிவரும்!

சீர்திருத்த செம்மல், பிரஞ்சுநாட்டுப் புரட்சித் தலைவன், அவன் காலத்திய இணையற்ற எழுத்தாளன், கிண்டல்புரிந்து சமுதாய சீர்திருத்தம் புரிந்த புதுயுகத்தின் சிற்பி, ஏழை பங்காளன்; எஃகு உள்ளம் கொண்டோன்,

வீரன் வால்டேர்!

மா. நெடுஞ்சேரலாதன்

இங்கர்சாலின் இணையற்ற சொற்பொழிவு.

விவரங்கட்கு:
பகுத்தறிவுப்பாசறை
பவழக்காரத்தெரு, :: சென்னை

Edited Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliar at Free Printers 147, Coral Merchant Street, Madras—1.